# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 19 ஞாயிற்றுக்கிழமை (03-03-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:98


## கண்காணிப்புக் குழுவின் தலைவர் கொழும்பு வந்து பிரதமருடன் பேச்சு!

### பிரபாவைச் சந்திக்க இன்று வன்னி பயணம்

கொழும்பு,மார்ச்3

அரசு - புலிகள் இடையிலான போர்நிறுத்த உடன்படிக்கையைக் கண்காணிக்கவுள்ள வெளிநாட்டுக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் புருகோவிட்(Trond Furuhovde) நேற்று கொழும்பு வந்துசேர்ந்தார்.

இன்று அவர் வன்னி சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திக்கவுள்ளார்.

நேற்றுக் காலை கொழும்பு வந்து சேர்ந்த அவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடினார். சுமார் ஒரு மணி நேரம் இக்கலந்துரையாடல் தொடர்ந்தது.

பொருளாதார மீள்கட்டமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவும் இக்கலந்துரையாடலில் பங்குகொண்டார். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் லண்டனில் நடத்திய பேச்சுக்கள் குறித்து அவர் பிரதமருக்கு எடுத்துக் கூறினார்.

கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் குறித்து அவர்கள் ஆராய்ந்தனர்.

கண்காணிப்புப் பணிகள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் கருத்தை அறிவதற்காக அவர் இன்று வன்னி செல்கிறார். அங்கு அவர் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்தித்து கலந்துரையாடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புக் குழுவின் தலைமையகத்தை எங்கு அமைப்பது என்பது குறித்து புலிகள் தரப்பிடம் இருந்து அவர் கருத்துக் கோருவார் என்று தெரிவிக்கப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)



நேற்று கொழும்பு வந்தடைந்த ஸ்கன்டிநேவியன் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன்ட் புருகோவிட் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார். பிரதமர் அவரை கைலாகு கொடுத்து வரவேற்ற காட்சி.

# போர் நிறுத்த உடன்பாட்டை முறிக்க ஜனாதிபதி - கதிர்காமர் கூட்டுச் சதி!

## கண்காணிப்புப் பணி புதனன்று தொடங்கும்

கொழும்பு,மார்ச்3

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையைக் கண்காணக்கும் பணியை ஸ்கன்டிநேவியன் கண்காணிப்புக் குழு எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பிக்கும் என்று நோர்வே தூதரகப் பேச்சாளர் தோமஸ் பிராங்லின் தெரிவித்தார்.

இந்தப் பணியில் ஈடுபடவிருக்கும் சுவீடன், பின்லாந்து, டென்மார்க், நோர்வே ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இன்று அல்லது நாளை கொழும்பு வந்து சேர்வர் என்றும் அவர் கூறினார்.

கண்காணிப்புக் குழுவின் தலைமையகத்தை எங்கே அமைப்பது என்பது குறித்து இன்னமும் முடிவு

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா முழு ஆதரவு!

### பிரதமருடன் கொலின் பவல் உரையாடல்

கொழும்பு,மார்ச்3

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா தனது உறுதியான ஆதரவைத் தெரிவித்திருக்கிறது.

அமெரிக்க ராஜாங்க செயலர் கொலின் பவல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு அமெரிக்க அரசின் உறுதியான ஆதரவை அவரிடம் தெரிவித்ததாக அமெரிக்கத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நோர்வேயின் முயற்சியால் எட்டப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை சுமார் 20 ஆண்டுகளாகத் தொடரும் நாட்டின் இன நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல உதவும் என்று கொலின் பவல் நம்பிக்கை வெளியிட்டார்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுவரும் முயற்சிகளை பவல் பாராட்டினார்.

(ஐ-6)

## நிலாவரைக் கிணற்றில் அழுகிய சடலம் மீட்பு!

புன்னாலைக்கட்டுவன்,மார்ச்3

புத்தூர் நிலாவரைக் கிணற்றிலிருந்து கல்லுடன் பிணைக்கப்பட்ட நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

மிகவும் அழுகி உருக்குலைந்து காணப்படும் அந்த சடலம் ஆணா, பெண்ணா என வேறுபடுத்தி இனங்காணமுடியாத நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இச்சடலம் குறைந்தது ஆறு மாதங்களுக்கு முன்னராவது உயிரிழந்த ஒருவருடையதாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

நேற்று சனிக்கிழமை இளைஞர்கள் சிலர் கிணற்றில் இறங்கி நீந்திய போது கையில் தட்டுப்பட்ட ஒரு பொருளை மேலே இழுத்து வந்த போது அது சடலம் என்பது தெரிய வந்தது. கல்லுடன் கட்டப்பட்டு கிணற்றில் போடப்பட்ட இச்சடலம் உருக்குலைந்துள்ளமையினால் கைகளும், கால்களும் வேறாக்கப்பட்டுள்ளன. தலையிலும் முடிகள் எதுவும் காணப்படவில்லை.

கொலை செய்யப்பட்ட ஒருவருடைய சடலமே இவ்வாறு கல்லுடன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பகைமை உணர்வைத் தூண்டிவிட முயல்வதாகப் புலிகள் குற்றச்சாட்டு

லண்டன், மார்ச்3

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டை முறியடிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரது ஆலோசகரான லக்ஷ்மன் கதிர்காமரும் ஒன்றிணைந்து சதி செய்வதாகப் புலிகள் இயக்கம் குற்றஞ்சாட்டியிருக்கின்றது.**

**சமாதான உடன்பாட்டில் உள்ள விதிகள் நாட்டின் இறைமைக்கும் பாதுகாப்புக்கும் தீங்குவிளைவிப்பதாக ஜனாதிபதி முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் அர்த்தமற்றவை; அபத்தமானவை என்று தெரிவித்திருக்கிறார் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம்.**

நிரந்தரப் போர்நிறுத்தத்தை உள்ளடக்கிய புரிந்துணர்வு உடன்படிக்கையைக் காரசாரமாகக் கண்டித்து அதனை மீளாய்வு செய்யுமாறு கேட்டு ஜனாதிபதி குமாரதுங்க பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதம் தொடர்பாகக் கேட்டபோதே புலிகள் தரப்பின இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார் பாலசிங்கம்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இப்போர்நிறுத்த உடன்படிக்கையை ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாய நாடுகள், இந்தியா, அமெரிக்கா உட்பட அனைத்துலக சமூகமும் வரவேற்றுப் பாராட்டிவரும் இவ்வேளையில் சந்திரிகா அம்மையார் மட்டும் கடும் எதிர்ப்புத் தெரிவிப்பது வேடிக்கையாக இருக்கிறது. இந்தத் தவறான, பொறுப்பற்ற போக்கை கடைப்பிடிப்பதால் சமாதான முயற்சிக்கு

(2ஆம் பக்கம் பார்க்க)

### ஜெயலலிதாவை கதிர்காமர் சந்தித்தார்

சென்னை,மார்ச்3

முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் சென்னையில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியிருக்கிறார்.

போயஸ் கார்டனில் உள்ள ஜெயலலிதாவின் வாசஸ்தலத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருக்கிறது.

சென்னைக்கு விஜயம் செய்திருக்கும் கதிர்காமர் ஜெயலலிதாவின்

(12ஆம் பக்கம் பார்க்க)

### 5 விமான சேவைகள் இன்று நடக்கும்

யாழ்ப்பாணம்,மார்ச்3

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையில் ஐந்து விமான சேவைகள் இன்று இடம்பெறவிருக்கின்றன என்று 'ஹெலிரூர்ஸ்' நிறுவனத்தின் யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது.

முதலாம், இரண்டாம் திகதிகளில் பயணம் செய்வதற்காக பயணச்சீட்டுப் பெற்றவர்களை பயண ஏற்பாடுகளுடன் இன்று காலை சிங்கள மகா வித்தியாலயத்துக்கு சமுகம் அளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## புலிகளுடன் பேச்சு நடத்தவுள்ள அரச குழுவில் 11 அமைச்சர்கள்

கொழும்பு,மார்ச்3

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெறவுள்ள நேரடிப் பேச்சுக்களில் அரசு தரப்புக் குழுவில் 11 அமைச்சர்கள் இடம்பெறவிருக்கின்றனர்.

அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோர் பேச்சுக்களில் முழுமையாகப் பங்குபற்றுவர் என்றும் -

ஏனைய அமைச்சர்கள் சுழற்சி முறையில் பேச்சுக்களில் கலந்துகொள்வர் என்றும் -

பிரதமர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுக்களில் எதிர்க்கட்சி சார்பில் கலந்துகொள்ள நால்வரை தெரிவு செய்யுமாறு எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேரில் கேட்டுக்கொள்வார் என்று அரச வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

## இன்னும் இரு ஆண்டுகளில் அரசு தானாகவே கவிழும்

### ஜனாதிபதியின் நம்பிக்கை இது!

கொழும்பு,மார்ச்3

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய வேலைத்திட்டங்களைப் பார்க்கும் போது அவரது அரசு இன்னும் இரு ஆண்டுகளுக்குள் கவிழ்வது நிச்சயம்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அரசு எதிர்பார்ப்பது போன்று புலிகள் சமாதானப் பேச்சுக்கு வரப்போவதில்லை. எனவே பெப்ரவரி 22ஆம் திகதி கைச்சாத்திட்ட உடன்படிக்கையை அரசு மீளாய்வு செய்ய வேண்டும் என்றும் ஜனாதிபதி கேட்டிருக்கிறார்.

வாரியப்பொலவில் தனது கட்சி

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# குடாநாட்டில் மூன்று இடங்களில் பரிவர்த்தனை நிலையங்கள்

## புதிதாக தலா ஆயிரம் தொலைபேசி இணைப்புகள்

யாழ்ப்பாணம்,மார்ச்3

பருத்தித்துறை, சித்தன்கேணி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் தனித்தனி பரிவர்த்தனை நிலையங்கள் (எக்சேஞ்) அமைக்கப்பட்டு ஒவ்வொரு பிரதேசத்திலும் ஆயிரம் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படவிருக்கின்றன.

ரெலிகொம் நிறுவனத்தின் வடக்கு - கிழக்குப் பொது முகாமையாளர் எஸ்.கனகசூரியர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

முதலில் பருத்தித்துறையிலும், அடுத்ததாகச் சித்தன்கேணியிலும் பரிவர்த்தனை நிலையங்கள் அமைக்கப்படும். அதைத் தொடர்ந்து சாவகச்சேரியில் பரிவர்த்தனை நிலையம் ஆரம்பிக்கப்படும்.

பருத்தித்துறையில் நிலத்துக்கடியிலான கேபிள் அமைக்கும் பணி நாளை திங்கட்கிழமைமுதல் ஆரம்பிக்கப்படும். எதிர்வரும் ஜூலைக்குள் அங்கு இணைப்புகள் வழங்கப்பட்டுவிடும்.

கேபிள் அமைக்கும் பணியை மேற்கொள்ளத் தேவையான உபகரணங்களும் 6 வாகனங்களும் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

இதேவேளை -

யாழ்.பரிவர்த்தனை நிலையத்தை விரிவுபடுத்தி மேலும் ஆயிரம் இணைப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- இப்படிக் கனகசூரியர் தெரிவித்தார்.

(ஐ-3)

# யுத்தநிறுத்த உடன்படிக்கை துணிச்சலான நடவடிக்கை!

## பாராட்டுகிறது ஆயர் மன்றம்

கொழும்பு,மார்ச்3

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்படிக்கை இனப்பிரச்சினையைத் தீர்க்கும் ஒரு துணிச்சலான நடவடிக்கையாகும்.

இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் மன்றம் அறிக்கை ஒன்றில் இவ்வாறு பாராட்டி இருக்கிறது. மன்றத்தின் தலைவரான ஆயர் ஒஸ்வேல்ட் கோமிஸ் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார்.

உடன்படிக்கையை முன்வைத்து சில அரசியல் தலைவர்கள் அவநம்பிக்கையை வெளியிட்டு இனங்களிடையே பேதங்களை ஏற்படுத்துகின்றனர். அதுமட்டுமன்றி மத பிரிவுகளிடையேயும் பேதங்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

இச்சமாதானப் பேச்சுக்களை கிறிஸ்தவ சமூகம் நடத்துகிறது என்று ஒரு கட்சித் தலைவர் கூறுகிறார். இச்சமாதான ஏற்பாடுகள் சர்வதேச கிறிஸ்தவ சமூகத்தின் சூழ்ச்சி என்று கூறுவது கேலிக்குரியதாகும்.

இவ்வாறு ஆயர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். (ஐ)

# மட்டுவிலில் குடும்பஸ்தர் மிதிவெடியினால் காயம்

யாழ்ப்பாணம்,மார்ச்3

மட்டுவில் கிழக்குப் பகுதியில் வீட்டு வளவைத் துப்புரவு செய்த குடும்பஸ்தர் ஒருவர் மிதிவெடியில் சிக்கிக் காயமடைந்தார். -

மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த வீரகத்தி சின்னத்துரை (வயது 64) என்ற குடும்பஸ்தரே காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சொந்த இடத்தில் இருந்து இடம்பெயர்ந்து சுன்னாகம் கிழக்கில் வசித்துவந்த இவர் கடந்த சில தினங்களாக மட்டுவிலுக்குச் சென்று தனது வளவைத் துப்புரவு செய்துவந்ததாகவும் -

நேற்றுக் காலையும் மண்வெட்டி மூலம் வளவைத் துப்புரவு செய்த சமயம் மண்வெட்டி மிதிவெடியில் பட்டுச் சிதறியதில் இவர் காயமடைந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

(ஐ-6-15)

# நிலத்தடி தாங்கி வசதியற்ற நிலையங்களில்

# பெற்றோலை பரல்களில் வைத்து விநியோகிக்க கூட்டுத்தாபனம் அனுமதி

அரியாலை,மார்ச்3

குடாநாட்டில் நிலத்தடி தாங்கி வசதி இல்லாத எரிபொருள் விற்பனை முகவர் நிலையங்களில் பெற்றோலை பரல்களில் வைத்து விநியோகிப்பதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எரிபொருள் விற்பனை நிலையங்கள் சிலவற்றில் நிலத்தடி தாங்கி வசதி இல்லாத பட்சத்தில் பரல்கள் மூலம் பெற்றோலை வழங்க வேண்டும் என்று யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளருடன் தொடர்புகொண்டு கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனையடுத்து நிலத்தடி தாங்கி வசதி இல்லாத எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு பரல்கள் மூலம் பெற்றோலை விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - கடந்த 25 ஆம் திகதி யாழ்.செயலகத்தில் நடைபெற்ற எரிபொருள் விநியோகம் தொடர்பான கூட்டத்தில் நிலத்தடி தாங்கி இல்லாத எரிபொருள் நிலையங்களுக்கு பரல்கள் மூலம் பெற்றோலை விநியோகிக்க வேண்டும் என்றும் -

சேதமடைந்த நிலத்தடி தாங்கிகள், கட்டடங்கள் என்பனவற்றைப் புனரமைத்து தரவேண்டும் என்றும் - சி.வீ.கே. சிவஞானம் கோரிக்கை விடுத்திருந்தார்.

(ஐ-17)

# கடற்படை அதிகாரிகளுடன் வேலணை மக்கள் சந்திப்பு!

வேலணைப் பிரதேசத்தில் மக்கள் சகஜ வாழ்க்கையை மேற்கொள்ள எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக கடற்படை அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று பருத்தியடைப்பில் இடம்பெற்றது.

நேற்றுப் பிற்பகல் பருத்தியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் ஊர்காவற்றுறை - வேலணைப் பிரதேச கடற்படை கட்டளை அதிகாரி நிமால் சந்திரசிறி, பொதுமக்கள் தொடர்பு அதிகாரி றொனி பெரோ, மக்கள் ஜனநாயகப் பேரவையைச் சேர்ந்த ஆர்.இராமேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட பொதுமக்கள் கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன்வைத்தனர்.

★ ஊருண்டை மயானத்துக்குச் செல்லும் வீதியைப் பொதுமக்கள் பாவனைக்குத் திறக்க வேண்டும்.

★ ஊருண்டைப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கவேண்டும்.

★ பருத்தியடைப்பு கடற்பகுதியில் மீன்பிடிக்க அனுமதிக்கவேண்டும்.

இந்தக் கோரிக்கைகளுக்குப் பதில் அளித்த கட்டளை அதிகாரி -

ஊருண்டைப் பகுதியில் மக்கள் மீள்குடியமர அனுமதிப்பதாகவும் -

பருத்தியடைப்பு கண்ணகை அம்மன் பகுதிக் கடற்பிரதேசத்தில் அதிகாலை ஒரு மணிமுதல் மீன்பிடிக்க அனுமதிப்பதாகவும் -

தெரிவித்தார்.

மாட்டுக்காளைப் பகுதியில் வீடமைப்புத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்யப்பட உள்ளதாகவும் -

கடற்படையினால் சேதமாக்கப்பட்டதாக இனங்காணப்படும் வீடுகளுக்கு நஷ்டஈடு பெற்றுத்தர ஏற்பாடு செய்வதாகவும் -

அவர் அங்கு உறுதியளித்தார்.

(ஐ-3-16)

# வானொலியில் அஞ்சல்

நல்லூர்,மார்ச்3

அகில உலகப் பெண்கள் தினமான எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள பெண்கள் தினவிழா இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.சேவையில் நேரடியாக அஞ்சல் செய்யப்படவுள்ளது. (ஐ-111)

# புரிந்துணர்வு உடன்பாடு நிரந்தரத் தீர்வைத் தரட்டும்!

## இந்துமத குருமார் ஒன்றியம் செய்தி

யாழ்ப்பாணம்,மார்ச்3

தற்சமயம் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் முன்னோக்கிச் சென்று பரஸ்பர புரிந்துணர்வோடு பேச்சுக்கள் இடம்பெற்று தமிழ் மக்கள் நிம்மதியாக வாழத்தக்க நிரந்தரத் தீர்வு எட்டப்படவேண்டும்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

புரிந்துணர்வு உடன்பாடு எட்டப்பட்டமைக்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் ஆசிகளைத் தெரிவித்து ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த உலகப் புகழ்பெற்ற ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டிருப்பது பற்றி இந்து மத குருமாராகிய நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியின் முன்னோடி நடவடிக்கையாக யுத்தநிறுத்தம், மோதல் தவிர்ப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட புரிந்துணர்வு உடன்பாடு ஒன்று ஸ்ரீலங்கா அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எட்டப்பட்டிருப்பது நாட்டு மக்கள் அனைவராலும் வரவேற்கப்படுகிறது.

இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட இருதரப்பினருக்கும் அனைத்து இந்து மக்கள் சார்பிலும் குறிப்பாக இந்துக் குருமாரின் சார்பிலும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மககளின் வாழ்க்கையில் அன்றாட பிரச்சினைகள் பல தீர்க்கப்பட்டு அவர்கள் சற்று [illegible]ழ்ச்சியோடு வாழும் நிலை இட[illegible]து காணப்படுகிறது என்பதைக் குறிப்பிடும் அதேநேரம் பல பாவனைப்பொருள்களின் விலையேற்றம் பற்றிய விசனமும், அதற்கான காரணம் பற்றிய பலவித ஐயப்பாடுகளும் இருப்பதைக் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

தொடர்ந்தும் இம்முயற்சி நல்ல முறையில் வளரவேண்டும் என்றும் தகுந்த முறையிலும் பரஸ்பர புரிந்துணர்வோடும் பேச்சுகள் நடைபெற்று நாட்டு மக்கள் அனைவருக்கும் உகந்த, குறிப்பாகத் தமிழ் மக்கள் இதுவரை காலமும் அனுபவித்த துயரங்களுக்கு முடிவாக, நிம்மதியாக வாழத்தக்க ஒரு நிரந்தர தீர்வினைக் கண்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற எமது விருப்பத்தையும் தெரிவித்து மாண்புமிகு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களுக்கும் ஆசிகூறி வாழ்த்துகிறோம் - என்றுள்ளது.

(ஐ-3)

# ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் சில கட்டுப்பாடுகள் தளர்வு!

வேலணைப் பிரதேசத்தில் படையினரால் அமுல் செய்யப்பட்டு வந்த கட்டுப்பாடுகள் சில, மக்களின் சகஜ வாழ்க்கையை ஏற்படுத்துவதற்காகத் தளர்த்தப்பட்டுள்ளன என்று ஊர்காவற்றுறை - வேலணை கட்டளை அதிகாரி நிமால் சந்திரசிறி உதயனுக்குத் தெரிவித்தார்.

தாம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:

☆ தீவுப் பகுதிக்கு செல்வதற்காக அல்லைப்பிட்டியில் பாஸ் பெறும் நடைமுறை முழுமையாக நீக்கப்பட்டுள்ளது.

☆ தீவுப் பகுதியில் 14 நாள்களுக்கு மேல் தங்க விரும்புபவர்கள் மட்டும் அங்கு தங்குவதற்கான 'பாஸ்' பெறவேண்டும்.

☆நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள் நிரந்தர பாஸ் பெறவேண்டும்.

☆வேலணை மத்திய கல்லூரி, விடுதி ஆகியன பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

☆வேலணை வங்களாவடியில் உள்ள கிராமசபைக் கட்டடம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

☆வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலை விரைவில் பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்படவிருக்கின்றது.

☆ தீவுப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு மாடு, விறகு, மரம், தளபாடங்கள் ஆகியவற்றை எடுத்துச் செல்ல விரும்புபவர்கள் கிராம சேவையாளர், பிரதேச செயலர் ஆகியோரின் சிபார்சுடன் கடற்படை அதிகாரியிடம் அனுமதி பெறவேண்டும்.(ஐ-3-16)

# போர்நிறுத்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் பங்கத்தை விளைவிக்க எத்தனிக்கிறார். எரிச்சல், தேவையற்ற அச்சங்கள் போன்ற காழ்ப்புணர்வில் இருந்தே அவரது கண்டனங்கள் வெளிப்பாடு காண்கின்றன.

"சமாதான உடன்பாட்டில் உள்ள விதிகள் நாட்டின் இறைமைக்கும், பாதுகாப்புக்கும் தீங்கு விளைவிப்பதாக ஜனாதிபதி குமாரதுங்க முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித அர்த்தமும் இல்லை. 'முன்னணிப் பாதுகாப்பு நிலைகள்', 'எல்லைக்கோடுகள்', 'கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள்', 'எல்லைச் சோதனைச்சாவடிகள்' என்ற பதங்களை மிகவும் நுணுக்கமாகப் பரிசோதனை செய்து இருதரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே உடன்பாட்டு ஆவணத்தில் அவை பாவிக்கப்பட்டிருக்கின்றன. அத்தோடு இப்பதங்கள் வடக்கு - கிழக்கின் களநிலை யதார்த்தத்தை பிரதிபலிப்பதாகவும் உள்ளன. இச்சொற்களை, பகை உணர்வைத் தூண்டிவிடும் ஆபத்தான பதங்களாக சந்திரிகா அம்மையார் கருதுகிறார். நாட்டின் ஸ்திரநிலைக்குப் பங்கம் விளைவிக்கும் கோட்பாடுகளாகவும் குறிப்பிடும் அவர் காஷ்மீர் நெருக்கடியை இதற்கு ஒப்புவமையாகக் காட்டுகின்றார். இந்த வாதங்கள் எல்லாமே அர்த்தமற்றவை; மிகவும் அபத்தமானவை.

"இறைமை என்ற கோட்பாட்டை திரு.கதிர்காமர் தவறாகப் புரிந்து வைத்திருக்கின்றார். இறைமை என்றால் ஓர் அரசின் தெய்வீக உரிமை அல்ல. அது மக்களின் மகத்தான ஆட்சி அதிகாரத்தையே குறிக்கின்றது.

"தமிழர் தாயகத்தில் புலிகள் வசம் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் இருக்கின்றன என்பதை இந்த அமைதி ஒப்பந்தம் ஏற்றுக்கொள்கிறது. இது ஒரு சர்வதேச அங்கீகாரமும்கூட. இதனைக் கதிர்காமராலும் சந்திரிகா அம்மையாராலும் சரணிக்க முடியவில்லை. இதனால்தான் ஒப்பந்த விதிகளை எதிர்க்கிறார்கள். புலிகளின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் நிலப்பரப்புகள் இருக்கின்றன என்பது யதார்த்தமான மெய்யுண்மை. இந்த யதார்த்த நிலையை ஏற்றுக் கொள்ளாமல் ஒரு போர்நிறுத்த உடன்படிக்கையையோ அல்லது போர்நிறுத்தக் கண்காணிப்பையோ செய்யமுடியாது. அப்படி இருக்கும் பொழுது உடன்பாட்டில் உண்மை நிலையைக் குறித்துக் காட்டுவது இறைமைக்கு ஆபத்தானது என அம்மையார் கருதுவதில் அர்த்தமில்லை.

"முந்திய அரசினால் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட ஒடுக்குமுறைகளைப் படிப்படியாக அகற்றி, போர் நெருக்கடியை தணித்து, தமிழர் தாயகத்தில் இயல்புநிலையைத் தோற்றுவிக்கும் நடைமுறைகள் இந்த உடன்பாட்டில் உள்ளன. இவை ஆக்கபூர்வமான அம்சங்கள். இதனை ஏற்க மறுக்கும் ஜனாதிபதி அரசியல் பேச்சுக்கள் நடைபெறும் திகதி, காலவரம்புகள், பேசப்படவேண்டிய விடயங்கள் எதுவும் அமைதி உடன்பாட்டில் குறிப்பிடப்படவில்லை எனக் குற்றஞ்சுமத்துகின்றார். தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை தீர்க்க மறுத்து, பேச்சுக்களுக்கு ஏற்க முடியாத நிபந்தனைகளை விதித்த காரணத்தாலேயே 1994, 95 பேச்சுக்கள் முறிவடைந்தன. இப்பொழுதும் பழைய நிபந்தனைகளையே திணிக்க முயல்கின்றார் சந்திரிகா அம்மையார் - என்று அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் தெரிவித்தார்.

மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு, இயல்புநிலை தோன்றியதன் பின்பு புலிகள் மீதான தடை நீக்கப்பட்டதும் பேச்சுகள் நிச்சயம் ஆரம்பமாகும் என திரு. பாலசிங்கம் நம்பிக்கை வெளியிட்டார்.

(ஐ)

# உதவிகேட்டு சைக்கிளில் ஏறி அதனை அபகரித்த எத்தன்

## இரக்கப்பட்டவர் ஏமாந்தார்

தென்மராட்சி,மார்ச்3

வீதியில் நின்று உதவிகேட்டு சைக்கிளில் ஏறிய ஒருவர், சன நடமாட்டம் இல்லாத இடமொன்றில் வைத்து சைக்கிளோட்டியைத் தாக்கிவிட்டு சைக்கிளைப் பறித்துச் சென்ற சம்பவம், கடந்த வியாழக்கிழமை இரவு 8மணியளவில் கரவெட்டி கோவில் சந்தைப் பகுதியில் இடம்பெற்றது.

துன்னாலையில் உள்ள உறவினரின் வீட்டுக்கு சென்றுவிட்டு வல்வெட்டித்துறையில் இருக்கும் தனது வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஒருவரே சைக்கிளைப் பறிகொடுத்துள்ளார்.

துன்னாலை வேம்படிப் பகுதியில் நின்றுகொண்டிருந்த ஒருவர் சைக்கிளில் ஏற்றிச் செல்லுமாறு கெஞ்சியதாகவும் -

அதனால் அவரை ஏற்றிக்கொண்டு சென்றபோது, தன்னைத் தாக்கி வீழ்த்திவிட்டு சைக்கிளைப் பறித்துச் சென்றுவிட்டதாகவும் -

சைக்கிளைப் பறிகொடுத்தவர் தெரிவித்தார். (ஓ-117)



இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் இந்து மதப் பயணிகள் சென்றுகொண்டிருந்த ரயில் தீ வைத்துக்கொளுத்தப்பட்டதையடுத்து இந்து - முஸ்லிம் மதக் கலவரம் மூண்டுள்ளது. அதனையடுத்து அம்மாநில அரசு கலவரத்தைத் தோற்றுவிப்பவர்களைக் கண்ட இடத்தில் சுடும் உத்தரவைப் பிறப்பித்துள்ளது. அரசின் கட்டளைக்கிணங்க கலவரக்காரர்களை கட்டுப்படுத்த இராணுவ வீரர் ஒருவர் கண்ணீர்ப்புகை துப்பாக்கியைத் தயார்ப்படுத்துவதை முதலாவது படத்திலும், கலவரக் கும்பலில் ஒருவரையும் அவர்களின் கோரப்பிடிக்குள் அகப்பட்டுச் சேதமடைந்த வாகனங்களை இரண்டாவது படத்திலும், வீடு ஒன்று தீயில்எரிந்து சிதைந்துள்ளதை வீட்டு உரிமையாளர் சோகத்துடன் பார்த்துக்கொண்டிருப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## 'கோயில் கட்டியே தீருவோம்' விஷ்வ ஹிந்து பரிஷத் உறுதி!

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் உள்ள சர்ச்சைக்குரிய இடத்தில் இராமர் கோயிலைக் கட்டிமுடிக்கும் தமது திட்டத்தை எக்காரணம் கொண்டும் கைவிடப் போவதில்லை என்று தீவிர இந்துத்துவ அமைப்பான விஷ்வ ஹிந்து பரிஷத் கூறிவிட்டது.

இதற்கு மேலும் பல கடும்போக்கு இந்து அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

இதனைத் தொடர்ந்து அடுத்து வரும் 15நாள்களுக்கு உத்தரப் பிரதேசம் முழுவதிலும் இராணுவத்தினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அயோத்தியில் இராமர் பிறந்த இடத்தில் கட்டப்பட்டிருந்ததாகக் கூறப்பட்ட பாபர் மசூதியை 9ஆண்டுகளின முன்னர் கடும்போக்கு இந்து அமைப்புக்கள் இடித்துத் தரைமட்டமாக்கின. இந்த மசூதி இடிப்பில் சம்பந்தப்பட்டதாக இன்றைய ஆளும் கட்சியான பா.ஜ.க. அரசின் அமைச்சர்களான எல்.கே.அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, செல்வி உமா பாரதி உட்பட பலர் மீது முன்னர் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

கடும்போக்கு இந்துத்துவ கோஷத்தின் மூலமே பாரதிய ஜனதாக் கட்சி மத்திய ஆட்சியை பிடித்ததாகக் கூறப்படுகிறது. (ஒ-8)

## குஜராத்தில் 3 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்து கலவரம்

### இறந்தவர்கள் எண்ணிக்கை 289 ஆகியது

ராஜ்கோட்,மார்ச்3

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் 'சபர்மதி' விரைவு ரயிலுக்குத் தீ வைக்கப்பட்ட சம்பவத்தையடுத்து அங்கு மூண்ட இந்து - இஸ்லாமிய மதக்கலவரம் மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

நேற்று நண்பகல்வரை இந்தக் கலவரத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 289 ஆக உயர்ந்திருந்தது. இதில் 40 பேர் கலகம் அடக்கும் பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இறந்தவர்களாவர்.

உலக அரங்கில்

மேலும் பல பகுதிகளில் புதிதாக வன்செயல்கள் பரவி வருவதாகவும் - இதனால் உயிரிழப்புகள் அதிகரித்துவருவதாகவும் - கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இரவு பெசானா மாவட்டத்தில் 28 பேர் உயிருடன் எரிக்கப்பட்டதாகவும் -

நேற்று பொலீஸ் துப்பாக்கிச் சூட்டில் இருவர் கொல்லப்பட்டதாகவும் -

செய்திகள் தெரிவித்தன.

அஹமதாபாத் நகரில் மட்டும் குறைந்தது 150 பேர் உயிரிழந்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டது.

பதற்றமான பகுதிகளில் நேற்று இந்திய இராணுவத்தினர் பாதுகாப்புத் தயார்நிலை அணிவகுப்புகளை நடத்தினர். நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக இராணுவம் அறிவித்துள்ளது. ஆயினும் கலவரப் பதற்றநிலை மாறுதல் ஏதுமின்றித் தொடர்வதாக சுயாதீனச் செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில் - பிரதமர் வாஜ்பாய், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உட்படப் பல அரசியற் தலைவர்கள் நேற்றுமுன்தினம் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில், 'வன்முறையில் ஈடுபடுவோரைத் தனிமைபடுத்தி அவர்களுடைய தீய சதியை தோற்கடிக்குமாறு இந்திய மக்களைக் கேட்டுக்கொண்டனர். (ஒ-6)

## தமிழகத்தின் 29ஆவது முதல்வராக செல்வி ஜெயலலிதா பதவியேற்றார்!

சென்னை,மார்ச்3

தமிழ்நாட்டின் 29ஆவது முதலமைச்சராக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்றுப் பதவியேற்றுக்கொண்டார்.

பொதுத்துறை, பொதுநிர்வாகம், உள்துறை, காவல்துறை, இந்திய அரசுப் பணிகள் ஆகியவை அவரது பொறுப்பில் இருந்துவரும்.

மாநில முதலமைச்சராக மூன்றாவது முறையாகப் பதவியேற்கும் இவர் 1991, 2001 ஆகிய ஆண்டுகளில் ஏற்கனவே முதலமைச்சராகப் பதவி வகித்துள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கில் இடம்பெற்ற பதவியேற்பு நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் பி.எஸ்.ராம்மோகன்ராவ், செல்வி ஜெயலலிதாவுக்கும், அவரது அமைச்சரவை சகாக்கள் 26 பேருக்கும் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.


முதலமைச்சர் பொறுப்பிலிருந்து விலகிய ஓ.பன்னீர்செல்வத்துக்கு புதிய அமைச்சரவையில் இரண்டாவது இடம் வழங்கப்பட்டுள்ளது. ஊழல் தடுப்புத்துறை அவரது பொறுப்பில் விடப்பட்ட அமைச்சுக்களில் ஒன்றாகும். பதவியேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முதல்வர் ஜெயலலிதா -

இந்தச் சமயத்தில் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்த வார்த்தைகளே இல்லை என்றும் -

சொல்லொணாத் துன்பங்களைத் தாங்குவதற்கு தனக்கு வலிமை. ஏற்பட தமிழ் மக்களின் ஆதரவே காரணமென்றும் -

குறிப்பிட்டார்.

பதவியேறபு விழாவில் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியின் மகனும், சென்னை மாநகர மேயருமான மு.க.ஸ்டாலின் மற்றும் தி.மு.க. பொதுச்செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான பேராசிரியர் க.அன்பழகன் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-6)



முதலமைச்சர் ஜெயலலிதாவும், அவருடன் பதவியேற்ற சில அமைச்சர்களும்

## 14 இஸ்ரேலியப் படையினர் தீவிரவாதிகளிடம் பிடிபட்டனர்

ஜெருசலேம்,மார்ச3

மேற்குக்கரையில் பலஸ்தீன அகதிகள் முகாம் ஒன்றின் அருகேயுள்ள பாடசாலையில் 14 இஸ்ரேலியப் படையினரின் கைகளைக் கட்டிப்போட்டுள்ளதாக பலஸ்தீனத் தீவிரவாதிகள் அறிவித்தனர். ஆனால் இதனை இஸ்ரேல் மறுத்துள்ளது.

மேற்குக்கரையின் வடபகுதியில் உள்ள 'பலடா' முகாமை இஸ்ரேலியப் படைகள் தாக்கியதாகவும் - மேற்படி முகாமில் உள்ள தீவிரவாதிகளை ஒடுக்குவதே தமது நோக்கம் என்றும் - இஸ்ரேலிய இராணுவத்தினர் தெரிவித்திருந்தனர்.

'பலடா' முகாம் மீது தாக்குதல் நடத்த முயற்சித்த இஸ்ரேலியப் படையினரில் 14 பேரையே தாம் பிடித்து அங்குள்ள பாடசாலை ஒன்றில் கட்டிப்போட்டுள்ளதாக பலஸ்தீனத் தரப்புத் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், பலஸ்தீன அகதி முகாம்களில் இருந்து இஸ்ரேலியப் படையினர் உடனடியாக விலகவேண்டும் என்று ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் வலியுறுத்தியுள்ளார். அகதிமுகாம்களுக்குள் இஸ்ரேலிய இராணுவத்தினர் அத்துமீறி நுழைவதால் பெரும் உயிர், பொருள் சேதங்கள் ஏற்படுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். (ஒ-8-10)

## குவாண்டனாமா தளத்தில் கைதிகள் உண்ணாவிரதம்

### கோரிக்கை நிறைவேறிய பின் கைவிடப்பட்டது

வாஷிங்ரன்,மார்ச்3

கியூபாவில் உள்ள அமெரிக்காவின் குவாண்டனாமா இராணுவத் தளத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தலிபான் மற்றும் அல்கெய்டா போராளிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

இஸ்லாமிய மதத்தில் தொழுகையில் ஈடுபடும் ஒருவர் தலையை மறைத்து 'குல்லா' அணிவது மரபு. ஆனால் தலைப்பாகைக்குள் கத்தி போன்ற ஆயுதங்களை வைத்துக் கொள்ளமுடியும் என்பதால் குவாண்டனாமா முகாமுக்குள் உள்ள கைதிகள் தலைப்பாகை அணிய அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அங்குள்ள தலிபான் கைதியொருவர் நேற்றுமுன்தினம் காலைத் தொழுகையின் போது தலைப்பாகை அணிந்திருந்தார். அந்தத் தலைப்பாகையைச் சிறைக்காவலர் அகற்றிவிட்டனர். இதனைக் கண்டித்து அங்குள்ள இஸ்லாமியக் கைதிகள் அனைவரும் உண்ணாவிரதத்தில் குதித்தனர்.

இதனையடுத்து அங்கு விரைந்த அமெரிக்க அதிகாரிகள் தொழுகையின்போது காவலரின் மேற்பார்வையின்கீழ் தலைப்பாகை அணிந்து கொள்ள கைதிகளுக்கு அனுமதி வழங்கினர். இதனால் போராட்டம் கைவிடப்பட்டது. (ஒ)

## பொதுநலவாய நாடுகளின் மாநாடு நேற்று ஆஸ்திரேலியாவில் ஆரம்பம்

கூலம்,மார்ச்3

'பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடவேண்டும்' என்ற கோஷத்துடன் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது உச்சி மாநாடு ஆஸ்திரேலியாவில் நேற்றுத் தொடங்கி யது.

வட பிரிஸ்பேனின் ஓய்வு ஸ்தலமான கூலம் நகரில் 54 பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் பங் கேற்கும் இந்த 4 நாள் மாநாடு நடைபெறுகிறது.

சிமபாப்வே அதிபர் ரோபேர்ட் முகாபேயினால் ஜனநாயகச் செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படும் நிலையில், அந்த நாட்டை பொதுநலவாய நாடுகள் அமைப்பிலிருந்து விலக்குவதா? இல்லையா? என்பதே இந்த மாநாட்டின் முக்கிய விவாதமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிம்பாப்வே தொடர்பாக அமைப்பின் அங்கத்துவ நாடுகளிடையே கருத்து வேறுபாடு உருவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த செப்ரெம்பர் மாதம் அமெரிக்கா மீது நடத்தப்பட்ட விமானத் தற்கொலைத் தாக்குதலின் பின்னர், உலகத் தலைவர்கள் கூடும் பெரிய மாநாடு இதுவாகும்.

கடந்த ஒக்ரோபரில் இந்த மாநாடு நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தபோதும் அமெரிக்கா மீதான தாக்குதலினால் அது பிற்போடப்பட்டிருந்தது. (ஒ)



மாநாட்டின் ஆரம்பத்தில் ஆதிவாசிகளின் நடனத்தை கண்டுகளிக்கும் எலிசபெத் ராணியும், தலைவர்கள் சிலரும்.

# குடாநாட்டில் கவனிப்பாரின்றிக் கிடக்கும்

# அரும்பொருள் காட்சியகங்கள்

'பழைய வரலாறுகளை ஓர் இனம் தெரிந்துகொள்வதில் என்ன பயன்?'

கவியரசர் கண்ணதாசனிடம் இப்படிக் கேட்கப்பட்டபோது அவர் சொன்னார்...

'எமது முன்னோரின் பெருமைகளைத் தெரிந்துகொண்டால்தான், நாம் இப்போது எவ்வளவு சிறுமைப்பட்டுவிட்டோம் என்பது தெரியவரும். மீண்டும் அந்தப் பெருமைகளை அடைய அப்போதாவது நாம் முயற்சிப்போம்.'

**- செந்தூர்ராஜ் -**

'ஆண்ட தமிழினம் மீண்டும ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை' என்ற கோஷத்தின் உண்மைத்துவத்தைப் புரிந்துகொள்ள வேண்டிய எமது இளைய தலைமுறையினர் அதில் கவனம் செலுத்துவதில்லை என்பதற்கும் -


அவர்களுக்கு அதில் ஆர்வத்தை ஏற்படுத்தவேண்டிய பெரியவர்களும் அசமந்தமாய் இருப்பதற்கும் - நேரடி சாட்சியமாய் இருப்பவை குடாநாட்டில் கவனிப்பாரற்றுக் கிடக்கும் அரும்பொருள் காட்சியகங்களும், சரித்திரச் சான்றுகளும் ஆகும்.

ஈழத்தமிழர் பூர்வீகத்தை வெளிப்படுத்தும் தொல்பொருள்கள் பல குடாநாட்டு நூதனசாலைகளில் பாதுகாக்கப்படுகின்றபோதிலும் மக்கள் அவற்றை விரும்பிச்சென்று பார்வையிடுவது மிகவும் அரிதாகவே உள்ளது.

இன்று இலங்கையில் நடைபெறும் யுத்தத்தின் பிரதான கருப்பொருளாக அமைந்து நிற்பது தமிழருக்கு இந்த மண்ணுடன் காலங்காலமாக உள்ள

## தமிழரின் பாரம்பரியம் குறித்து இளைய தலைமுறை பாராமுகம்

உரிமை சம்பந்தப்பட்டது. இலங்கையின் சரித்திரம் தொடர்பான இலக்கியச்சான்றுகள் பெரிதும் சிங்கள, பாளி மொழிகளில் அமைந்துள்ளமை



**14 ஆம், 15 ஆம் நூற்றாண்டில் மக்கள் பயன்படுத்திய வீசிறிகள், கத்திகள், மிதி அடிகள், தந்தப் பொருள்கள் சிலவற்றைப் படத்தில் காணலாம்.**

யாலும் -

வரலாற்றில் சற்றுக்காலம் தாழ்த்தியே தமிழர் வரலாறு கூறும் இலக்கியங்கள் - அதிலும் குறிப்பாக உள்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள் - எழுச்சிபெற்றமையாலும் -

இலங்கையின் தமிழர் வரலாற்றினை மற்றவர் மறைப்பதற்கும் எம் மண்ணின்மீது எமக்குள்ள உரிமையை அவர்கள் திரித்துக்கூறவும் வழி ஏற்படுத்துகின்றது.

இந்த நிலையில் தொல்பொருளியல் தமிழருக்கும், தமிழர் இலங்கையில் வந்தேறு குடிகள் அல்லர் என்பதை நிரூபிப்பதற்கும் துணைபுரிகின்றன. இவற்றைப் பாதுகாப்பதும், அவற்றினைப் பற்றி அறிந்திருக்க வேண்டியதும் ஒவ்வொரு தமிழரதும் கடமையாகும்.

எனினும், யாழ். குடாநாட்டிலுள்ள மக்கள் தமிழர் பாரம்பரியத்திலோ, தமிழர் வரலாற்றிலோ அக்கறை கொள்வோராகத் தெரியவில்லை. வரலாற்றில் அக்கறையற்ற தன்மையே தமிழரது வாழ்வினை கேள்விக்குறியாக்கிட மற்றோருக்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நல்லூர், நாவலர் கலாசார மண்டபத்துடன் இணைந்து அருகில் அமைக்கப்பட்டிருக்கும் அரும்பொருள்காட்சியகம் மற்றும் கந்தரோடையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள அரும்பொருளகாட்சியகம் ஆகியவை பற்றி எத்தனை பேர் அறிந்துள்ளனர்; அவற்றை எத்தனை பேர் சென்று பார்வையிட்டுள்ளனர் என்று வினவும் போது கிடைக்கும் பதில் மிகக் கவலையையே அளிக்கிறது.

காரைநகருக்குக் கூட்டிச்சென்று 'கசூரினா பீச்'சைக் காட்டும் ஆசிரியர்களும், பெற்றோர்களும் தமிழர் பாரம்பரியம், பண்பாடு, வரலாறு, தனித்துவம் முதலானவற்றினை விளக்கும் சரித்திரச் சான்றுகளைத் தமது பிள்ளைகளுக்குக் காட்டத் தவறுகின்றனர்.

நல்லூர் அரும்பொருள் காட்சியகத்தில் மிகமிக அரிய பொருள்கள் இருக்கின்றன. 1995ஆம் ஆண்டு இடம்பெயர்வின்போது பல பொருள்கள் இழக்கப்பட்டபோதிலும் காப்பாற்றப்பட்ட பொருள்களைக்கொண்டு பொலிவுடன் விளங்குகிறது அது.

அங்கு நாம் சென்றபோது ஊழியர்கள் தூசி தட்டிப் பொருள்களைத் துடைத்துப் பேணுவதில் ஈடுபட்டிருந்தனர். அவர்களிடம் அரும்பொருள்களைப் பார்க்க மக்கள் வருவது பற்றிக் கேட்டபோது, "எப்போதாவது ஒரு சிலர் வருவார்கள்" என்று பதில கிடைத்தது. "அதுமட்டுமல்ல 1995 ஆம் ஆண்டிற்கு முன் எங்காவது ஏதேனும் தொல்பொருள்கள் மீட்கப்பட்டால் மக்கள் கொண்டுவந்து தருவார்கள். இப்போது அவ்வாறு எவரும் எதனையும் கொண்டுவந்து தருவதில்லை. அதேநேரம் இதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு அரசும் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை" எனவும் ஆதங்கப்பட்டனர் அங்கு பணி



**தமிழ் மன்னர்கள் பயன்படுத்திய வாள்கள், கத்திகளைப் பற்றி விளக்கமளிக்கிறார் யாழ். மாவட்டத் தொல்லியல் ஆய்வுப் பொறுப்பதிகாரி வே.சிவலிங்கம்.**

யாற்றும் ஊழியர்கள்.

1983ஆம் ஆண்டின் பின்னர் அரும்பொருள் காட்சியங்களுக்கு பணியாளர் எவரும் புதிதாக இதுவரை நியமிக்கப்படவில்லை. அத்துடன், நல்லூர், கந்தரோடை ஆகிய இடங்களில் உள்ள அரும்பொருள் காட்சியகங்களில் மொத்தம் 12 பேர் மாத்திரமே பணியாற்றுகின்றனர்.

இதனால் பாரமரிப்பு, புதிய பொருள்களைச் சேகரிப்பது முதலான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அவர்கள் பெருஞ்சிரமத்தினை அனுபவிக்கின்றனர்.

இந்த அரும்காட்சியகங்களுக்கு இதுவரையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை என்பது தமிழரின் பெருமைமிகு தொல்பொருள்களைப் பாதுகாப்பதில் அரசு கொண்டுள்ள அசமந்தப் போக்கினை எடுத்துக்காட்டுவதாகவே கருத வேண்டியுள்ளது.

1948ஆம் ஆண்டு கொழும்புத் துறையில் கரையொதுங்கிய திமிங்கிலத்தின் எலும்புகள் நல்லூர் தொல்பொருள் ஆராய்ச்சி மையவாசலில் கிடக்கின்றன.

அவற்றைப் பாதுகாப்பதற்கு ஒரு கூடாரம் அமைக்கக்கூட வழிசெய்யப்படவில்லை. வெய்யிலிலும் மழையிலும் கிடந்து மிகவும் வேகமாக அவை சேதமாகின்றன. அருங்காட்சியகத்தில் உள்ளவற்றில், நல்லூர் சட்டநாதர் சிவன்கோவில் ஆலயப் பகுதியில் மீட்கப்பட்ட 11ஆம் நூற்றாண்டுக்கும் 13ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட மகாலட்சுமி, சிவன், பிள்ளையார், அம்மன், சண்டேஸ்வரர், வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான், செம்பினாலான மகிசாசுரவர்த்தனி, காகத்தின்மீது அமர்ந்திருக்கும் சனீஸ்வரன் ஆகிய சிலைகளும் அடங்குகின்றன.

900 ஆண்டுகளுக்குமுன் அவை கருங்கல்லிலும், சலவைக்கல்லிலும் செதுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

நல்லூரைச் சூழவுள்ள பகுதிகள் வரலாற்றுப் பாரம்பரியம்மிக்க இடங்களாகும். அவற்றில் யமுனா ஏரி, மந்திரிமனை, சங்கிலியன் தோப்பு என்பனவும் கட்டாயமாக நாம் அறிந்திருக்கவேண்டிய இடங்கள் ஆகும்.

அரும்பொருள்காட்சியகத்தில் மிகப் பழங்காலத்தில் பாவிக்கப்பட்ட குடை, மிதி அடி, பாக்குவெட்டிகள், பல்லக்குகள், உரல்கள், மத்து, குண்டம், விசிறி எனப்பல பொருள்கள் காணப்படுகின்றன.

அன்று காவடி எடுத்தவர்கள் குத்திய முள்களின் அளவைப் பார்க்கும்போது, அந்த முள்களைக்குத்தி இப்போதும் காவடி எடுக்கச் சொன்னால் பலர் நேர்த்தி வைப்பதை நிறுத்திவிடுவார்களோ என எண்ணத் தோன்றுகிறது. அத்தகைய பெரிய முள்களை யாழ்ப்பாணத்து முன்னோர் 500 ஆண்டுகளுக்கு முன்னர் பயன்படுத்தி உள்ளார்கள் என்பதை எண்ணும்போது ஆச்சரியம் ஏற்படுகிறது.

(9ஆம் பக்கம் பார்க்க)

# வாசகர் திருமுகம்

## கணனிப் பூங்காவின் விளக்கம்

28.02.2002(வியாழக்கிழமை) திகதியிடப்பட்ட தங்கள் பத்திரிகையின் 'வாசகர் திருமுகம்' பகுதியில் சான்றிதழ் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாக ஒரு மாணவன் எழுதியிருப்பதாக கடிதம் ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. உண்மைக்குப் புறம்பான அடிப்படையில் திரிவுபடுத்தப்பட்டு வரையப்பட்ட கடிதம் குறித்தும் சம்பந்தப்பட்ட மாணவன் என தம்மை அறிமுகப்படுத்தியுள்ள நபர் சம்பந்தமாகவும், அவரின் குற்றச்சாட்டு சம்பந்தமாகவும் எமது நிறுவனத்தினால் மறுப்பறிக்கை விடவேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் சம்பந்தப்பட்ட மாணவரின் குற்றச்சாட்டுக்களில் ஒன்று சித்தியடைந்த மாணவர்கள் அனைவருக்கும் ஒரே நேரத்தில் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்பதாகும். இது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதே.

இருந்தபோதிலும் கௌரவ புனர்வாழ்வு அமைச்சர் வருகையின் நிகழ்ச்சி நிரலில் எமக்கு ஒதுக்கப்பட்ட நேரம் குறைவாக இருந்ததால் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் அமைச்சரினால் சான்றிதழ் வழங்குவது என்பது நடைமுறைக்குச் சாத்தியமற்றதொன்றாகும். எனவே சித்தியடைந்த 400இற்கும் அதிகமான மாணவர்களில் ஒவ்வொரு பயிற்சிநெறியிலும் அதிகூடிய புள்ளிகளைப்பெற்ற (Batch Top) மாணவர்களுக்கு அமைச்சரினால் சான்றிதழ் வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டு வழங்கப்பட்டது. ஏனைய மாணவர்களுக்கு பிறிதொரு தினத்தில் சான்றிதழ் வழங்கத் தீர்மானிக்கப்பட்டு அதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

எனவே அதிதிறமை சித்தி (A - Grade) பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை என்பதை சம்பந்தப்பட்ட மாணவர் இனியாவது புரிந்துகொள்ள அல்லது புரிந்துகொள்ள முயற்சிசெய்தல் வேண்டும். இதுதவிர தானும் அதிகூடிய புள்ளிகளைப்பெற்ற மாணவன் என்ற தோரணையில் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். ஆதலால் முதலாவது பிரிவில் ஒவ்வொரு பயிற்சிநெறியிலும் அதிகூடிய புள்ளிகளைப்பெற்ற 14 மாணவர்களின் விவரம் கீழே தரப்படுகிறது:-

| | |
|---|---|
| 1. நிரஞ்சினி தியாகராஜா | 2. சிங்கர் நேசலிங்கம் |
| 3. ஜெயகௌரி ராஜரட்ணம் | 4. கண்ணபிரான் கமலவண்ணன் |
| 5. அரியகுட்டி சுபேசன் | 6. செல்லையா ஸ்ரீரங்கன் |
| 7. தர்மினி குணசிங்கம் | *8. சிவதர்சினி பரமேஸ்வரன் |
| 9. சிவசுப்பிரமணியம் பகீதரன் | 10. பிரியரஜனி துரைராஜசிங்கம் |
| 11. பிரான்சிஸ் சேவியர் அனிஸ்ரன் | 12. வளர்மதி குழந்தை |
| 13. சோமசுந்தரம் கமலச்சந்திரன் | |

14. செபஸ்ரியாம்பிள்ளை ஜோசப் ஜேசுராசா

மேற்குறிப்பிட்ட 14 மாணவர்களில் தன்னை அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவனாகப் பிதற்றிக்கொள்ளும் மாணவரின் பெயர்(கரன்) எனக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். இல்லை என்பது கண்கூடு. சம்பந்தப்பட்ட பெயர் பிழையாக அல்லது புனையப்பட்டதாக அல்லது சுருக்கப்பட்டதாக இருந்தால் அதற்கு நாம் பாத்திரவாளியல்ல.

அடுத்து இங்கு தற்காலிக பயிலுநராக வேலைசெய்கின்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார். இங்கு தற்காலிக பயிலுநரான முதலாவது பிரிவில் சிறப்பாக சித்தியடைந்த 32 பேர் கடமையாற்றுகின்றார்கள். அவர்களில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்ற 8 மாணவர்களுக்கு மட்டுமே (இவர்கள் மேற்குறிப்பிட்ட 14 மாணவர்களுள் உள்ளடங்குபவர்கள்) அன்று சான்றிதழ் வழங்கப்பட்டதே தவிர எல்லோருக்கும் வழங்கப்படவில்லை என்பதைத் தெரியப்படுத்துகின்றோம்.

மேலும் முக்கியமான விடயம் யாதெனில் முதலாவது பிரிவில் தனக்கு அதிவிசேடசித்தி கிடைத்ததாக சம்பந்தப்பட்ட நபர் எழுதியிருந்தார். ஆனால் அதிதிறமைசித்திபெற்ற மாணவர்களின் பெயர்ப்பட்டியலில் கூட சம்பந்தப்பட்ட மாணவரின் பெயர் (தன்னை 'கரன்' என்றே பத்திரிகையில் வெளிப்படுத்தியிருந்தார்) இல்லை என்பது ஒரு நகைப்பிற்கிடமான விடயமாகும். அத்துடன் தான் தற்போது இங்கு இரண்டாவது பிரிவில் கல்வி கற்பதாகக் குறிப்பிட்டிருந்தார். அப்படியான பெயருடைய ஒருபெயர் வழி நிறுவனத்தில் இல்லை என்பது மற்றுமோர் ஆச்சரியமான விடயமாகும்.

எனவே சம்பந்தப்பட்ட நபர் உண்மையில் ஒரு மாணவனாக இருந்து அதற்குரிய கண்ணியத்தைக் காப்பாற்ற விரும்பினால் முதலில் எம்மோடு தொடர்புகொண்டு தெளிவடைந்திருக்கலாம். அதைவிடுத்து பத்திரிகை வாயிலாக சேறுபூசமுனைவது கோழைத்தனமான விடயமாகும். நிறுவனத்தைப்பற்றி, அதன் தவறுகளைப்பற்றி விமர்சனம் செய்வதை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் ஆதாரமற்ற பொய்யான குற்றச் சாட்டுக்களை நாங்கள் நிராகரிக்கின்றோம். சம்பந்தப்பட்ட மாணவர் எனத் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளும் நபர் நேரில் வருகைதந்தால் அவருக்குப் போதிய விளக்கமளிக்க நிறுவனம் தயாராக இருக்கின்றது என்பதுடன் நிறுவனம் தொடர்ந்து சலசலப்புகளுக்கு அஞ்சாமல் யாழ்மாவட்ட மாணவர்களுக்கு தமது காத்திரமான பங்களிப்பை வழங்கி வரும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

*ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

*உத்தியோகத்தர்கள் சார்பில்* **பணிப்பாளர், தகவல் தொழில்நுட்பப் பூங்கா.**

## சிவராத்திரியை சினிமாராத்திரியாக்கலாமா?

சிவனுக்கு உரியதாகிய இரவு சிவராத்திரி. இது மாசி மாதத்தில் தேய்பிறைகாலமாகிய அபரபட்சத்தில் சதுர்த்தசி கூடிய தினமாகும். இத்தினத்தில் திரகரணசுத்தியுடையவராகவும், ஆசாரசீலம் உடையவராகவும் இருந்து உபவாசம் மேற்கொள்ளவேண்டும். முதல் நாள் ஒருவேளை உண்டு சிவாராத்திரியன்று உபவாசமிருந்து நித்திரை கொள்ளாது சிவத்தியானம், இறைபுகழ் கேட்டல், நான்கு சாமங்களிலும் அபிஷேகம், அர்ச்சனை, தூபம், தீபம், ஸ்தோத்திரம் என்பவைகளால் சிவனை வழிபட வேண்டும். ஆனால் சிவராத்திரி என்றால் தற்போது ஒரு கேலிக்கூத்து ராத்திரியாகக் கொண்டாடப்படுகின்றது. இன்றைய இளைஞர்களும், யுவதிகளும் சிவராத்திரி எப்போது வரும் என்று காத்துக் கொண்டிருக்கின்றார்கள். அது இறைவனை வழிபடுவதற்காக அல்ல. அன்றிரவு பல ஆலயங்களுக்குச் சுற்றுப்பிரயாணம்செய்து சிவராத்திரியின் மகிமையை மறந்து ஏதேதோ நடத்துகிறார்கள். சினிமாப்படம் காட்டுகின்றார்கள். சிவராத்திரி என்ற போர்வையில் வீட்டில் நித்திரை வழிப்பதற்கு சினிமாப்படங்கள் பார்க்கின்றார். இதனால் சைவசமய விழாக்களின் மகிமையை சீரழிப்பதுடன் எதிர்காலத்து சிறார்களின் மனதில் சினிமாப்படம் பார்ப்பதுதான் சிவராத்திரி என்ற தீய விதைகளை விதைக்கின்றனர். 12.03.2002 செவ்வாய்க் கிழமை வருகின்ற சிவராத்திரியாவது பக்தி சிரத்தையோடு அனுஷ்டிப்பதற்கு முயற்சிப்போம்.

*பிரான்பற்று, பண்டத்தரிப்பு* **என்.சசிவர்ணன்**

உதயன்

## சமாதான தேவதையின் போர்க் கோலம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆயுள் ஆக இரண்டே வருடங்கள்தான் என்று கூறியிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

ரணிலின் அரசை ஒரு வருடத்தின் பின் கலைத்துவிட தனது அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டி இருக்காது. ஏனெனில் அவரது அரசின் தற்போதைய வேலைத்திட்டங்களைப் பார்க்கும் போது அடுத்த இரு ஆண்டுகளுக்குள் அவர் தோல்வி அடைவது உறுதி - என்றும் அவர் கூறியிருக்கிறார்.

வாரியப்பொல பகுதியில் கட்சி ஆதரவாளர்கள் கலந்துகொண்ட பொதுக கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி, பிரதமர் ரணில் எதிர்பார்ப்பது போன்று புலிகள் சமாதானப் பேச்சுக்கு வருவார்கள் எனத் தான் நம்பவில்லை என்றும் எனவே பெப்ரவரி 22 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்.

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையைக் கடுமையாக விமர்சித்தும் - அதனை எந்தவேளையிலும் செல்லுபடியற்றதாக்கிவிடத் தன்னால் முடியும் என்று மிரட்டல் விடுத்தும் - வருகின்ற ஜனாதிபதி, தெற்கில் சமாதானத்தை அவாவி நிற்கும் மக்கள் மத்தியில் அது தொடர்பான அவநம்பிக்கைகளை விதைக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டுவருகிறார்.

தான் கலந்துகொள்கின்ற கூட்டங்களிலும் வைபவங்களிலும் தற்போதைய சமாதான முயற்சிகளை குழப்பியடிக்கும் தொனியில் அவர் உரையாற்றத் தொடங்கியிருக்கிறார்.

சுமார் ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நாட்டின் ஆட்சி அதிகாரத்தை சந்திரிகா குமாரதுங்க ஏற்ற போது நாட்டு மக்கள் அனைவரினதும் - குறிப்பாக தமிழ் மக்களின் - நெஞ்சங்களிலும் நினைவுகளிலும் அவர் ஒரு சமாதானத் தேவதையாகவே காட்சியளித்தார்.

ஸ்ரீலங்காவில் தமிழ் மக்கள் சுய கௌரவத்துடனும் ஏனையோரைப் போன்ற சம அந்தஸ்துடனும் வாழக்கூடிய சமாதானத் தீர்வு ஒன்றை - பேரினவாத சக்திகளுக்கு மத்தியில் நின்று கொண்டும் - துணிந்து முன்வைக்கப் போகிறவர் அவரே என்று தமிழ் மக்கள் ஒரேயடியாக நம்பினர்.

அன்று ஏற்பட்டது போன்ற சமாதான சூழல் ஒன்று தற்போதும் உருவாகி இருக்கிறது. தீர்வு விடயத்தில் அரசுத் தரப்பிலும் புலிகள் தரப்பிலும் ஏற்பட்டிருக்கும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் கூடிய புரிந்துணர்வு, இந்தத் தடவை எப்படியாவது தீர்வு கிட்டிவிடும் - சமாதானம் நிலைத்துவிடும் - என்ற திடமான நம்பிக்கையைத் தோற்றுவித்திருக்கிறது.

ஆனால் அன்று சமாதானத் தேவதையாக மக்கள் முன் தோன்றிய சந்திரிகா இன்று சமாதான முயற்சிகளுக்கு எப்படியாவது சமாதி கட்டிவிடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு போர்க் கோலம் பூண்டிருக்கிறார்.

'சமாதானத்துக்காக யுத்தம்' நடத்தி நாட்டை பேரழிவின் விளிம்புக்கு இட்டுச்சென்ற அவர் கத்தி இன்றி - யுத்தம் இன்றி முழுக்க முழுக்க புரிந்துணர்வின் அடிப்படையில் எட்டப்பட்டுவரும் சமாதானத்துக்கு எதிராகப் போர் தொடுக்க முயல்கிறார்.

சமாதான முயற்சிகளை இந்த முறையும் அடியோடு தகர்த்துவிட வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பியுள்ள பேரினவாத சக்திகளுக்கு ஆதரவாக - அவர்களின் உணர்வுகளுக்கு வெறியூட்டுகின்ற விதத்தில - தனது கருத்துக்களில் விஷம் கக்கத் தொடங்கியிருக்கிறார்.

தனது அதிகாரங்களைத் தக்க வைத்துக் கொள்ளும் ஒரே நோக்குடன் தெற்கில் உருவாகிவரும் சிங்கள பேரினவாதக் கூட்டணிக்குத் தலைமை ஏற்பவர் போன்று தன்னை மாற்றிக்கொள்ளும் ஜனாதிபதியின் போக்கு அவரை இந்த நாட்டின் முதல்தர பேரினவாதியாக அடையாளப்படுத்திக் காட்ட ஆரம்பித்திருக்கிறது.

நாட்டின் தலைவியின் இந்தப் போக்கு முழு நாட்டையும் மக்களையும் படுபாதாளத்தை நோக்கியே இட்டுச் செல்லும் என்பது திண்ணம்.

### கோப்பாயில் இயங்கிவரும்
## காசநோய் ஆஸ்பத்திரியில் பல்வேறு வசதியீனங்களாம்

வலி.கிழக்கு,மார்ச்3

மயிலிட்டியில் இருந்து இடம் பெயர்ந்து தற்போது கோப்பாயில் இயங்கிவரும் காசநோய் ஆஸ்பத்திரி பல்வேறு வசதியீனங்களின் மத்தியில் இயங்கிவருவதாகத் தெரவிக்கப் படுகிறது.

தற்போது 14 ஆண்களும் 9 பெண்களும் உள்ளக நோயாளர்களாகவும், மேலும் பலர் வெளிநோய்களாகவும் சிகிச்சை பெற்றுவரும் இந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சைகளை வழங்குவதற்கென நிரந்தர வைத்தியர் எவரும் இல்லாதநிலை காணப்படுகின்றது.

அத்துடன் நோயாளர்களுக்கு போதிய கட்டில் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்றும் -

பாவனையில் உள்ள கட்டில்களுககும் போதிய விரிப்புக்கள் வழங்கப் படவில்லை என்றும் -

கூறப்படுகிறது.

இதனால் மேலதிகமாக நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நோயாளர்களைப் பராமரிப்பவர்கள் தங்குவதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்படாததால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதேவேளை ஏனைய ஆஸ்பத்திரிகளில் வழங்கப்படுவது போன்று சத்துணவுகளும் இங்குள்ள நோயாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை எனக் கூறப்பட்டது.

(ஒ-7-180-ரி)

## யாழ்.போதனா ஆஸ்பத்திரியின் சிறுவர் வார்ட் பழைய இடத்தில்

யாழ்ப்பாணம்,மார்ச்3

யாழ்.போதனா வைத்தியசாலை புதிய கட்டடத்தில் இயங்கிவந்த சிறுவர் சிகிச்சை விடுதி மீண்டும் பழைய இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்த பழைய விடுதிகள் திருத்த வேலைக்குட் படுத்தப்பட்டபோது சிகிச்சைப்பிரிவு புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

தற்பொழுது பழைய கட்டடத்தின புனரமைப்புப் பணிகள் முடிவடைந்ததையடுத்து சிறுவர் சிகிச்சைப் பிரிவு அங்கு மாற்றப்பட்டுள்ளது.

சிறுபிள்ளை நோயாளர்கள் விடுதி இயங்கிவந்த புதிய கட்டடத்தில் இடம்பெயர்வுக்குப் பின் இதுவரை காலமும் இயங்காத நிலையில் இருந்துவந்த பெண்களுக்கான வைத்திய விடுதியொன்றும் ஆண்களுக்கான வைத்திய விடுதியொன்றும் (4, 8 ஆம் வார்ட்டுகள்) ஆரம்பிக்கப்பட வுள்ளன.

(ஒ-15)

## வடமராட்சி கடற்பகுதியில் 'படையப்பா தொழில்' அதிகரிப்பு

தென்மராட்சி,மார்ச்3

வடமராட்சிக் கடற்பகுதியில் 'படையப்பா தொழிலில்' ஈடுபடும் கடற்றொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

மீன் பிடிப்பதற்கு படையினர் அனுமதித்துள்ள நேரத்தை விடுத்து, இரவு 10 மணிக்கு மேல் கடலுக்குச் சென்று மீன்பிடிப்பதையே வடமராட்சி மக்கள் 'படையப்பா தொழில்' என்று சூசகமாகக் குறிப்பிடுகின்றனர்.

'படையப்பா தொழிலில்' ஈடுபட்டுவிட்டு கரைசேரும் கடற்றொழிலாளர் கடற்படையினரிடம் சிக்கிக் கொள்வதும் -

'பச்சை மட்டை' அடிக்கு இலக்காகும் அவர்கள் கொண்டுவரும் மீன்கள் பறிமுதல் செய்யப்படுவதும் -

அதிகரித்துவரும் சம்பவங்களாகி விட்டன.

கடந்த வியாழக்கிழமை கற்கோவளம் கடலிலும், எரிந்த அம்மன் கோயிலடி கடலிலும், 'படையப்பா தொழிலில்' ஈடுபட்டதாகக் கூறப்படும் சுமார் 60 கடற்றொழிலாளர்கள் படையினரால் பிடிக்கப்பட்டு எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## நவக்கிரியில் திருடப்பட்ட சைக்கிள் குட்டியபுலம் பகுதியில் மீட்கப்பட்டது

அச்சுவேலி,மார்ச்3

நவக்கிரிமேற்கில் இருந்து கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கொள்ளையிடப்பட்ட சைக்கிள் ஒன்று குட்டியப் புலத்தில் நடந்த கொள்ளை முயற்சி ஒன்றின்போது மீட்கப்பட்டுள்ளது.

நவக்கிரி மேற்கில் வசித்துவந்த வயோதிபத் தம்பதியர்களை இரு மாதங்களுக்கு முன்னர் கத்திமுனையில் அச்சுறுத்திய கொள்ளையர் கோஷ்டி ஒன்று ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையிட்டதுடன், வீட்டு உரிமையாளரின் சைக்கிள் ஒன்றையும் எடுத்துச்சென்றிருந்தது.

கடந்தவாரம் குட்டியப்புலம் பகுதியில் உள்ள கத்தரித் தோட்டம் ஒன்றில் இருந்து கத்தரிக்காய் திருட முயன்றவர்கள் அங்கு காவலில் இருந்தவர்களால் விரட்டியடிக்கப்பட்டனர். அப்போது அந்தத்திருடர் கோஷ்டி தம்மிடம் இருந்த மூன்று சைக்கிள்கள் பெயர் எழுதப்பட்ட தொப்பி என்பனவற்றை கைவிட்டுச் சென்றுவிட்டது.

இவ்வாறு கைவிடப்பட்ட மூன்று சைக்கிள்களையும் மீட்ட அச்சுவேலிப் பொலிஸார், அவற்றில் ஒன்று நவக்கிரிமேற்கில் திருடப்பட்ட சைக்கிள் என்று அடையாளங்கண்டு அதனை நவக்கிரி மேற்கு வாசியிடம் ஒப்படைத்தனர். (ஒ-7-11)

### உதயவாக்கு

காலையில் அதிகநேரம் படுக்கையில் படுத்திருக்கும் எவரும் பெருமையோ, புகழோ பெற்றதில்லை.

### நாளை

மாசி 20
திங்கட்கிழமை
(04-03-2002)
திதி : ஷஷ்டி
பின்னிரவு 2.54 வரை.
நட்சத்திரம் : விசாகம்
வைகறை 4.44 வரை.
மரணயோகம்
சுபநேரம் : 12.27 - 1.57
ராகுகாலம் : 7.57 - 9.27
(பழைய நேரப்படி)

## நாட்டு நடப்பு

### லண்டனிலிருந்து பேரன் பாட்டிக்கு எழுதிய கடிதம்

லண்டன்
03-03-2002

அன்புள்ள அம்மம்மா!
நானிப்ப 'டெயிலி டமிள்' படிக்கிறேன்
மம்மி டடி 'டமிழ் கொஞ்சம்' பேசிறார்கள்
'வீக்லி' 'வண் (One)' 'டமில் கிளாஸ்' இருக்கு
விமல் 'அன்ரி' இப்ப 'ரீச்' பண்ணிறா

மச்சாள் சசிமேல் எனக்கு 'லவ்'
மறுக்காமல் என்னை 'மறி' பண்ண சொல்லுங்கோ
'கெட்' மாற்றி டாலிங்கை அனுப்புங்கோ
சசிமச்சாள் கெயரை 'பொப்' பண்ணட்டும்

கில்ஸ்போட்ட ரைட்ஸ்கேட் படத்தை
கிங்சிலி அங்கிள் கொண்டு வந்து தந்தார் நேற்று
வெள்ளைக்காறியை 'டிவோஸ்' பண்ணி விட்டேன்
விளையாட்டுக்கு இரவில் இப்போ போவதில்லை

சசிமச்சாள் உங்கே 'மறி' (Marry) பண்ணிவிட்டாள்
சடுதியாய் டிவோஸ் எடுத்து அனுப்புங்கோ
டக்காவுக்கு 'கெட்மாத்தி' அனுப்பினால்
'டபிள்' குவிக்காய் நானவளை கூப்பிடுவேன்.

டாலிங் ஆச்சிக்கு பல கிஸ்க்கள்
அன்புள்ள
கே.பீ.லவின்ரன்

*பின்குறிப்பு:*
'பபா' பெற்றிருந்தால் பாட்டியிட்டை
கொடுத்துவிட்டு சசிதனியே வரட்டும்.

***- விகடகவி.***

### யாழ். சிறைச்சாலையில்
## படையினர் மேற்கொண்டிருந்த உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

யாழ்.சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய்கள் கடந்த வியாழக்கிழமை முதல் தமது போராட்டத்தை கைவிட்டனர்.

நேற்றுமுன்தினம் உயரதிகாரிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட படையினரைச் சந்தித்து போராட்டத்தை கைவிடுமாறும் -

உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தாம் ஆவன செய்வதாகவும் - வாக்குறுதியளித்ததையடுத்தே போராட்டத்தை கைவிடச் சம்மதித்ததாகக் கூறப்பட்டது.

பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பாக யாழ்.சிறைசாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள எட்டு படையினர் - கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் தமது வழக்குகளை தென்பகுதி நீதிமன்றங்களுக்கு மாற்றுமாறும் -

தம்மை தென்பகுதி சிறைகளுக்கு மாற்றம் செய்யுமாறும் - கோரி உண்ணாவிரதம் மேற்கொண்டுவந்தனர்.

அதில் மூவரின் உடல்நிலை பலவீனமாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஒ-6-9)

### விமானங்கள், கப்பல்கள் மீதான
## யுத்த அபாயக் காப்புறுதி முற்றாக நீக்கப்பட்டது

கொழும்பு,மார்ச்3

இலங்கையின் விமான நிலையம், துறைமுகம் ஆகியவற்றில் தரிக்கும் விமானங்கள் மற்றும் கப்பல்கள் மீது யுத்த அபாயக் காப்புறுதிக் கட்டணம் முற்றாக நீக்கப்பட்டுள்ளது.

அரசும் விடுதலைப் புலிகளும் மேற்கொண்டுள்ள யுத்தநிறுத்த நல்லெண்ண நடவடிக்கைகளைத் தொடர்ந்து லண்டன் 'லொயிட்ஸ்' காப்புறுதி நிறுவனம் இந்தத் தீர்மானத்தினை எடுத்துள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் காப்புறுதிக் கட்டணம் நீக்கப்பட இருப்பதாக இந்த நிறுவனம் அறிவித்துள்ளது. இதன் அடிப்படையில் இலங்கை அந்த நிறுவனத்தில் வைப்புச் செய்திருந்த 5கோடி அமெரிக்க டொலர்களை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்கு அந்த நிறுவனம் இணங்கி உள்ளதாக பிரதமர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

## சிறுவர்களின் மீது ஆயுத மோதலின் தாக்கம்



கோடிக்கணக்கான சிறுவர்கள் ஒரு துப்பாக்கியை ஒருபோதும் கண்டிராத போதிலும், அவர்கள் யுத்தங்களினால் ஊனப்படுகிறார்கள்.

அபிவிருத்தியில் முதலீடு செய்யக்கூடிய வளங்கள் ஆயுத உற்பத்தியிலும் கொள்வனவிலும் திசை திருப்பப்படுகின்றன. இதனால் அநேகமான யுத்தங்கள் அவற்றை நிகழ்த்துவதற்கு ஆகக் குறைந்த அளவிலேனும் நிதிவளமற்ற நாடுகளிலேயே நடக்கின்றன என்பது எமது காலத்தில் துன்பகரமான யார்த்தங்களுள் ஒன்றாக இருக்கின்றது.

ஆயுத மோதலானது சிறுவர்களின் உடல் ரீதியான, உளரீதியான, உணர்வு ரீதியான வளர்ச்சியின் எல்லா அம்சங்களையும் பாதிக்கின்றது.

க.செந்தூரன்
4ஆம் வருட மருத்துவ மாணவன்.

*உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:*
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை 30, போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
021- 2261 *Ext -274.*

சிறுவர் பாதுகாப்பு(உ.இ) அனுசரணையுடன் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினரின் வெளியீடு (C/20748)

# எமது மனங்களில் தூய சிந்தனை வேண்டும்

## தவக்காலச்சிந்தனை

நல்லவற்றையே செய்தாலும்கூட அவற்றுக்கு காரணங்கண்டு வெறுக்கும் நிலையே உள்ளது. நல்ல செயல்கள் எதுவெனத் தெரிந்தாலும் அவற்றைப் புரிந்து ஏற்றுக்கொள்ள - பாராட்ட - நல்ல மனநிலை வேண்டும்.

இயேசு சென்ற இடமெல்லாம் நன்மை செய்தார். வார்த்தைகளால் போதித்தார். செயல்களால் அவற்றை உறுதிப்படுத்தினார். அவரது செயல்கள் அவர் யாரிடம் இருந்து வந்தார் என்பதை அடையாளம் காட்டின. "என் அன்பார்ந்த மைந்தர் இவரே; இவரில் நான் மகிழ்கிறேன். இவருக்குச் செவிசாயுங்கள்" என்னும் குரல் இயேசு சொல்லிலும், செயலிலும் வாழ்ந்தார் என்பதைக் காட்டுகின்றது.

உயர்ந்த சிந்தனை நம்மிடம் இருந்தால்தான் வாழ்க்கையில் உயரமுடியும். வெற்றிக்குரிய எண்ணங்களும், தோல்விக்குரிய எண்ணங்களும் தோன்றுவதற்கு அடிப்படை சிந்தனையே. செயல்கள் அனைத்தும் வெற்றிப் பாதைக்குச் செல்லவேண்டுமானால் சிந்தனை என்ற வழிகாட்டியின் மூலமே செல்லவேண்டும்.

### பத்தொன்பதாம் நாள்

லட்சோபலட்சம் மக்களைக் கொன்று குவித்து மகிழ்ச்சியடைந்த ஹிட்லர் ஒருநாள் இறந்தான்.

வெற்றிமேல் வெற்றிகுவித்த நெப்போலியனும் ஒருநாள் மரணமடைந்தான்.

இளவயதில் வெற்றிவாகைசூடி இமயத்திலும் தனது கொடியைப் பறக்கவிட்ட கிரேக்கப் பேரரசன் அலெக்சாண்டரையும் ஒருநாள் மரணம் தொட்டது.

உலக சரித்திரத்தைப் புரட்டிப்பார்க்கின்றபோதும் எண்ணற்ற அரசர்கள் அரசாள வந்திருக்கிறார்கள், வாழ்ந்திருக்கிறார்கள், மரித்திருக்கிறார்கள்.

ஆனால் பலஸ்தீன தேசத்தில் பெத்தலகேமில் பிறந்து, வளர்ந்து மக்களுக்குச் சேவை செய்து, அன்பை மூலதனமாக வைத்து அனைவரையும் தன்பால் ஈர்த்த இயேசுபிரான் இயற்கையை வென்றார். அதன் நியதிகளை வென்றார். சரீரப் பிரகாரமாக அநேக மக்களுடைய நோய்களைச் சுகப்படுத்தினார். மிகக் கொடிய நோய்களால் அவதியுற்ற மனிதர்களை இயேசு முற்றிலும் குணப்படுத்தினார்.

மனமாற்றத்தின் காலமாகிய தவக்காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் புறக்கணிக்கப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டு, கொலைசெய்யப்பட்டு, உயிர்த்த இயேசுவை நம்புவோம். அவர் காட்டிய பாதையை நோக்கி மனம்மாறி வாழ்வாகுவோம்.

*ஆனைக்கோட்டை* யோ.கீதபொன்கலம்

# ஐ.ஐ.எஸ். நிறுவன ஏற்பாட்டில் மாத இறுதியில் கணனிக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,மார்ச்3

வடக்கின் பிரபல கணனிக் கல்வி நிறுவனமான 'இன்ஸ்ரிரியூட் ஒவ் இன்போமெற்றிக் ஸ்ரடீஸ்' (ஐ.ஐ.எஸ்.) நிறுவனத்தின் ஏற்பாட்டில் இம்மாதம் 23ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை கணனிக் கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது.

நிறுவனத்தின் தலைமையகத்தில் இந்தக் கண்காட்சி இடம்பெறும்.

தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தினை விளக்கும் விழிப்புணர்வுக் கண்காட்சியாக நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கணனி சார்ந்த பல அரிய பொருள்கள் காட்சிப்படுத்தப்படும். அத்துடன் நவீன முறையிலான கணனிப் பயிற்சி பற்றியும் விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

பிரிட்டன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் குடாநாட்டு மாணவர்கள் கணனிக் கற்கைநெறிகளைத் தொடர்வதற்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் -

பாவனையாளர்களின் கணனி சம்பந்தமான சிக்கல்களைத் தீர்த்து வைத்தல், விளக்கங்கள் அளித்தல் என்பனவும் கண்காட்சியில் இடம்பெறவுள்ளன. (ஐ-ரி)


# நிப்பொன் (NIPPON)
குளிர் / சூடான நீர் வழங்கி
**Hot & Cold Water Dispenser**

சூடான தேநீர், கோப்பி மற்றும் குளிர்பானங்களை இலகுவில் தயாரிக்கலாம்

Heavy Duty வகை
* ஜப்பானிய Compressor
* பொது இடங்கள் அலுவலகம் மற்றும் வீடுகளில் பாவிக்கக் கூடியது.



Light Duty வகை
* இலகுவானதும் கவர்ச்சிகரமானதும்
* 3 கலன் நீர் கொள்கலனுடன் கூடியது.
* அலுவலகம், வீடுகளில் பாவிக்கக் கூடியது
* எவ்வேளையிலும் குளிர் / சூடான நீரை பெறமுடியும்
* வெப்பநிலை மாற்றிக் கொள்ளக் கூடியது

**LANKA NIPPON**
No. 18, Keyzer St, Colombo-11.Tel:437735.
No.10, Trelawny Place, (Behind Milk Bar), BambalapitiyaJunc,Colombo-04.Tel:589992.
AVAILABLE ISLAND WIDE
நிப்பொன் உத்தரவாதமுள்ள தயாரிப்புக்கள்


## பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்
### உடற்கோப்பு அமைத்தல்
# கேள்விப் பத்திரம்

இசுசு 05 ரிதான் லொறிக்கு பழைய உடற்கோப்பு நீக்கி புதிய உடற்கோப்பு அடிப்பதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. திருப்பி வழங்கப்படாத கட்டுப்பணம் 100 ரூபாவும், திருப்பி வழங்கப்படும் கட்டுப்பணம் 1000 ரூபாவும் சங்கக் காசாளரிடம் செலுத்தி, எதிர்வரும் 11.03.2002 திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிவரை விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 15.03.2002 பிற்பகல் 1.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்,
*பண்டத்தரிப்பு, பரிஷ் ப.நோ.கூ.சங்கம்,*
*பண்டத்தரிப்பு.*

(C/20928)

## சிரமதானம்

அரசாங்கத்தின் 100 நாள் துரித அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 10 மணிக்கு அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் கோப்பாய் பிரதேச செயலக அலுவலர்களும் மற்றும் கிராம அலுவலர்களும் வைத்தியசாலை ஊழியர்களுடன் இணைந்து சிரமதானப் பணியை மேற்கொள்ள உள்ளனர். (ஐ-10)

## மோசமான நிலையில் காரைநகர் வீதிகள்

காரைநகரின் பிரதான வீதியான மேற்கு வீதி, மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது. அதேவேளை, காரைநகர் பொன்னாலைப் பாலமும் நீண்டகாலமாகத் திருத்தப்படாமையினால் சேதமடைந்துள்ளது.

9பாலங்களைக் கொண்ட இந்த வீதியின் இருபக்கங்களும் கடலரிப்புக்கு உட்பட்டு வருவதால் விரைவில் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஒ-73)

## நடமாடும் செயலக சேவை

யாழ்ப்பாணம்,மார்ச்3

அரசாங்கத்தின் 100 நாள் துரித அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அச்சுவேலி பிரதேச சபை உபஅலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பான ஒழுங்குகளை மேற்கொள்வதுடன் மக்களுக்கும் தெரியப்படுத்துமாறு கிராம அலுவலர்களைப் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஐ-10)

## நாகதம்பிரான் ஆலயத்தில் இன்னமும் பூசை இல்லை

வடமராட்சி கிழக்கு,மார்ச்3

நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயம் தொடர்ந்து பூசையின்றி பூட்டிய நிலையிலேயே உள்ளது.

படைத்தரப்பில் இருந்து அனுமதி கிடைக்காத காரணத்தினால் கோயில் அமைந்திருக்கும் பகுதிக்குச் செல்ல முடியவில்லை என்று கோயில் பரிபாலன சபை நிர்வாகக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனுடன் நடந்த சந்திப்பினை அடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை பரிபாலன சபை நிர்வாகிகளும், பக்தர்களும் ஆலயத்தைக் கழுவி சுத்தமாக்கச் சென்றபோது படையினர் அவர்களை அனுமதிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-182)

## வீதி திறக்கப்பட்டது

தென்மராட்சி,மார்ச்3

பொதுமக்கள் பாவனைக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்த சாவகச்சேரி - புத்தூர் வீதி கடந்த புதன்கிழமை தொடக்கம் திறந்துவிடப்பட்டுள்ளது.

இம்மாத நடுப்பகுதியில் மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பொங்கல் உற்சவம் நடைபெறவுள்ளதையடுத்து இவ்வீதியைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

சாவகச்சேரியிலிருந்து நுணாவில், கனகன்புளியடிச் சந்தியூடாக தற்போது போக்குவரத்து இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது (ஐ-117)

## தேவை

யாழ்.கே.கே.எஸ். வீதியில் இயங்கவுள்ள புத்தகமும் வீடியோ கொப்பியும் வாடகைக்குக் கொடுக்கும் நிலையத்தில் கடமை யாற்ற இரு பெண்கள் தேவை.

விள. இல. 1472,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம். (1172)


## ஸ்பெஷல்
### குங்குமப்பூ புரியாணி சிக்கன்

ரூபா 125/- மட்டுமே!
நண்பகல் 12.00 - 3.00 மணிவரை
பெற்றுக்கொள்ளலாம்.

ஜோ. எகட்டனின்
*ஜெசித்தாரா விருந்தகம்,*
19/3, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்பாக,
சுண்டுக்குளி. (1261)


உ

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
### வருடாந்த
# இல்ல மெய்வல்லுநர் போட்டி

*காலம்:* **05.03.2002 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணி**

*பிரதம விருந்தினர்:*
திரு.சி.சிவானந்தன் *அவர்கள்*
*(உதவி ஆணையாளர், மதுவரித் திணைக்களம், வடமாகாணம்)*

*பரிசில் வழங்கல்:*
திருமதி சாரதாதேவி சிவானந்தன் *அவர்கள்*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்.இந்துக்கல்லூரி. (C/20920) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 27 | | 01 |
| 04 | | 02 |
| 1938 | | 2002 |



## அமரர் வெ.வேலு (கந்தையா)
*(ஓய்வுபெற்ற மின்கம்பி இணைப்பாளர்)*

பாசத்தின் திருவுருவாய் வாழ்ந்தவரே!
அன்பு நெறிகாட்டி எம்மை வளர்த்த அப்பாவே!
பாதியில் எம்மைத் தவிக்கவிட்டுச் சென்றீரே!
வற்றாத கண்ணீருடன் நாமிங்கு வாடுகிறோம்!

இன்று (03.03.2002) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம் மற்றும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*குறிப்பு:* அன்னார் நோயுற்று சிகிச்சைபெற்ற வேளை யாழ். போதனா வைத்தியசாலையில் 27ஆம் வார்ட்டில் பணியாற்றிய டாக்டர்கள், தாதியர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவிப்பதுடன், இத்துயரச்செய்தி கேட்டு நேரில்வந்து எமக்கு ஆறுதல் கூறியோருக்கும் உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*அம்பலவாணர் வீதி,*
*உடுவில் கிழக்கு, சுன்னாகம்.*
- மனைவி, பிள்ளைகள்.

(1266)


# திருமண மண்டபமும் தங்குமிட வசதிகளும்

வடபகுதியிலிருந்தும் மற்றும் எந்த நாட்டிலிருந்தும் கொழும்பு செல்லும் பயணிகளுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி!

## VANIY INN லொட்ஜ்

சகல வசதிகளுடன் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவைபுரியும் சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில்...
ஒரு முறை விஜயம் செய்து பார்த்தால் உண்மை புரியும்.
No.89, Hinny Appuhamy Mawatha. Vanrooyan street, Colombo - 13.
T.P.No. 01-433182, 472582
M.திலகவதி, ஈஞ்சடி, சுதுமலை வடக்கு, மானிப்பாய். (1243)


# நெஞ்சம் சுமக்கும் இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 05 | | 23 |
| 01 | | 02 |
| 1928 | | 2000 |



## பண்டிதர் நல்லதம்பி கந்தையா
(இளைப்பாறிய அதிபர்)
திதி: 03-03-2002

*"அன்போடு எமை ஆதரித்து வளர்த்து*
*நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே!*
*ஆசானாய், அதிபனாய், அறிஞனாய், அரிய குடும்பத் தலைவனாய்*
*அனைவரும் போற்ற வாழ்ந்த அப்பாவே!*
*உங்கள் அறிவுரைகள் கேட்டு ஆண்டிரண்டு ஆனதுவே*
*இறைவனுடன் சேர்ந்து எமை வழிநடத்த வேண்டுகிறோம்."*

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*
(1207)
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# கண்டி வீதி ஊடாக யாழ். பயணம்

"லக்பிம" ஞாயிறு இதழில் 'மானிகே தீருவ' என்ற பகுதியில் வாராவாரம் கற்பனைச் சித்திரங்கள் வெளிவருகின்றன. அண்மையில் வெளியான கற்பனைச் சித்திரத்தின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.

'லக்பிம' ஞாயிறுப் பதிப்பின் ஆசிரியர் பீடத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே பணியாற்றுகின்றனர். இருப்பினும் இவர்கள் எல்லோரும் ஒரேமுகமாகச் சந்திப்பது அரிது. இவர்கள் அடிக்கடி பணிமனைக்கு வெளியே கடமையின் நிமித்தம் செல்வதால் ஒரேமுகமாகச் சந்திக்க வாய்ப்புகள் இல்லை. எனவே நாங்கள் எல்லோரும் ஒன்றாகச் சந்தித்து உல்லாசப் பயணம் ஒன்றை மேற்கொள்வது எனத் தீர்மானித்தோம்.

இந்தப் பிரயாண ஒழுங்குகளை ஒருவரிடம் ஒப்படைத்தோம். அவர்தான் அமைப்பாளர். உல்லாசப் பயணம் மேற்கொள்வது என முடிவெடுக்கப்பட்ட ஒரு சில தினங்களில் அமைப்பாளர் முகத்தைத் தூங்க விட்டவாறு என்னிடம் வந்தார்.

பயண ஒழுங்குகளுக்கு என்ன நடந்தது என நான் அவரிடம் கேட்டேன்?

எல்லோரும் யாழ்ப்பாணத்திற்குத்தான் போகவிரும்புகிறார்கள் என்றார் அமைப்பாளர்.

விமானத்தில் செல்ல ஒருவருக்கும் விருப்பம் இல்லை. நெடுஞ்சாலை வழியாக அதுவும் பஸ்ஸில்தான் போகவேண்டும் என அடம்பிடிக்கிறார்கள் என்றார் அமைப்பாளர்.

எனக்கு நல்ல சந்தோஷம். பத்திரிகைக்காரர்கள் என்றால் அப்படித்தான் இருக்கவேண்டும் என்றேன்.

ஏ-9 வீதி திறக்கப்பட்டவுடன் நாங்கள் யாழ்ப்பாணத்திற்கு நேரடியாகச் செல்லலாம் இல்லையா என நான் கூறியபோது அமைப்பாளரின் முகத்தில் மகிழ்ச்சி தென்படவில்லை.

எங்கடை ஆள்கள் ஹோட்டல்களிலோ அல்லது வாடிவீடுகளிலோ தங்கமாட்டார்களாம். விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களின் குடும்பங்களுடன்தான் இரவில் தங்கப் போகிறார்களாம் என்றார் அமைப்பாளர்.

மிகவும் நல்லது. எங்களில் ஒருவருக்கு விசேட கட்டுரை எழுத வாய்ப்பு உண்டு. "லக்பிம' குடும்பம் விடுதலைப் புலிகளின் குடும்பங்களுடன் கழித்த அந்த வார இறுதி நாள்கள்' எனத் தலைப்பிடலாம் என்றேன் நான்.

அமைப்பாளருக்கு அதுகூட திருப்தியானதாகப்படவில்லை.

இருந்தாலும் எங்கடை ஆள்களின்ரை புதுப்புது ஆசைகளை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியாது. யாழ்ப்பாணப் பயணத்தின் நினைவாக புலிகளின் வாய்க்குள் தங்கள் கையை விட்டவாறு படமெடுக்கப் போகிறார்களாம் என்றார் அமைப்பாளர். எனக்கு கைதட்டவேண்டும்போல் தோன்றியது.

## தமிழில்: கஜனி

நினைவுச் சின்னமாக அந்தப் படங்களை வைத்திருக்கலாம். ஆனால் அதற்கு முன்னர் அந்தப் படங்களை எங்கள் பத்திரிகையில் முன்பக்கத்தில் பிரசுரிக்கவேண்டும். நல்ல பெட்டிச் செய்தியும் போடவேண்டும் - என்றேன்.

நான் கூறியவற்றால் அமைப்பாளரின் முகம் மகிழ்ச்சியடைவதற்குப் பதிலாக மேலும் மேலும் சோம்பியது.

காலை உணவையும் மதிய உணவையும் எடுத்துச்செல்வோம் என நான் கூறினேன். இல்லையாம் புலிகளின் கடைகளில்தான் சாப்பிடுவார்களாம் என எல்லோரும் கூறுகின்றனர் என்றார் அமைப்பாளர்.


எங்கள் ஆள்கள் நல்ல பத்திரிகையாளர்கள்தான். அவர்களுக்கும் ஆசை இருக்கும் தானே. அவர்கள் ஒருநாளும் புலிகளின் கடைகளில் சாப்பிட்டிருக்கமாட்டார்கள் என்றேன் நான்.

## 'லக்பிம' பத்திரிகையின் கற்பனைச் சித்திரம்

கடைசியில் அமைப்பாளர் தனது கெடுபிடிகளைத் தளர்த்திக் கொண்டார். அப்படி என்றால் நாங்கள் பயணத்தை மேற்கொள்வோம் என்றார் அமைப்பாளர்.

நான் மேசையில் மேளம் தட்டினேன். அப்படி என்றால் எங்கடை ஆள்கள் எல்லோரும் ஒன்றாகச் சந்திக்கும் நாள் விரைவில் வரப்போகிறது என்றேன்.

ஏ-9 நெடுஞ்சாலை அதாவது யாழ்ப்பாணம் கண்டி வீதி எப்போது திறக்கப்படும் என எதிர்பார்த்துக் கொண்டிருப்போரில் மிகவும் அதிக ஆர்வத்துடன் இருப்பவர்கள் 'லக்பிம' ஞாயிறுப் பதிப்பின் ஆசிரியர் பீடத்தினரே என என்னால் துணிந்து கூறமுடியும். காரணம் அன்றுதான் நாங்கள் பத்துப்பேரும் ஒன்றாகச் சந்திக்கப் போகிறோம். ★



ஜேர்மன் உதவிநிறுவனத்தின் உதவியுடன் வெளிநாட்டு பிளாஸ்ரிக் அறுவைச் சிகிச்சை நிபுணர்களால் இணுவில் மக்லியட், மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை ஆகியவற்றில் முந்நூறுக்கு மேற்பட்டவர்களுக்கு கண்பரிசோதனைகள் நடத்தப்பட்டு கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. இன்ர பிளாஸ்ட் யு.கே. என்ற (INTER PLAST U.K.) நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் டேவிட் பிரான்ஸ் (Mr.DAVID FRANG) நோயாளி ஒருவரின் கண்ணை பரிசோதனை செய்வதைப் படத்தில் காணலாம். ஜேர்மன் உதவி நிறுவன பணிப்பாளர் லயன் முத்துக்குமாரசாமி வைத்திசாலை செயலாளர் எஸ்.ஆர்.ஜேசுபாலன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: வலிகாமம் தெற்கு செய்தியாளர்)*



கோண்டாவில் ரயில் நிலைய வீதி ஞானவீரசங்க சனசமூக நிலையத்தின் 58 ஆவது வருடாந்த நிகழ்வில் முன்னாள் சிரேஷ்ட ஹன்சாட் அறிக்கையாளர் லயன் செல்லப்பா நடராசா பிரதம விருந்தினராகப் பங்குபற்றி உரையாற்றிய போது எடுக்கப்பட்ட படம். படத்தில் நிலையத் தலைவர் கே.எம்.இராஜேந்திரம், செயலாளர் க.வேலழகன், பொருளாளர் அ.சற்குணநாதன் ஆகியோரும் காணப்படுகின்றனர். (ஜ)




சிவத்தமிழ் வித்தகர், முதறிஞர் பண்டிதர் சிவத்திரு. க.வைத்தீசுவரக்குருக்களின் பணிகளைப் பாராட்டும் விழாவும் 85ஆவது அகவை நிறைவு விழாவும் அண்மையில் மணிவாசகர் சபையினால் காரைநகர் மணிவாசகர் மணிமண்டபத்தில் நடத்தியபோது புலவர் மணி பண்டிதர் க.மயில்வாகனனார் பண்டிதர் க.வைத்தீசுவரக் குருக்களுக்கு பொன்னாடை போர்த்து கௌரவிப்பதையும் அருகில் மணிவாசகர் சபைத் தலைவர் பண்டிதர் மு.சு.வேலாயுத பிள்ளை, சபையின் பரீட்சை செயலாளரும் ஓய்வுபெற்ற அதிபருமான க.தில்லையம்பலம், ஓய்வு பெற்ற கொத்தணி அதிபர் கே.கே.நடராசா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்:காரைநகர் செய்தியாளர்)*

## 'கல்வாரி ராகங்கள்' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்3

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் 'கல்வாரி இராகங்கள் - 2' என்னும் 'ஒளிப்பேழை' வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது மணி மண்டபத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது. (ஒ-8)



கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய தென்பகுதி பல்கலை மாணவர்கள் தமது யாழ்ப்பாண விஜயத்தின் ஞாபகார்த்தமாக நினைவுச் சின்னம் ஒன்றினை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திடம் வழங்கினர்.

ஸ்ரீபாலி பல்கலைக்கழக ஊடகவியற் கற்கைநெறியின் மாணவ தலைவர் அஜித்கமகேயடம் இருந்து அந்த நினைவுச் சின்னத்தை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.கஜேந்திரன் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

(ஜ-4-180)

# விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படும் அறிகுறி தெரிகிறது

## 'பொங்கு தமிழ்' நிகழ்வில் சந்திரசேகரன் உரை

வவுனியா,மார்ச்3

விடுதலைப் புலிகள் மீதான தடை விரைவில் நீங்கும். அதற்கான அறிகுறிகள் தெரிகின்றன.

- இவ்வாறு தெரிவித்தார் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன்.

வன்னிச் சமூகம் ஏற்பாடு செய்த 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வவுனியா நகர சபை வளாகத்தில் நடைபெற்றன. இந்த எழுச்சி நிகழ்வின் இறுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் பெ.சந்திரசேகரன் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழினம் என்ற ஒன்று உள்ளது என உலக நாடுகள் திரும்பிப் பார்ப்பதற்குக் காரணம் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டமே.

மக்கள் மத்தியில் இன்று எழுந்துள்ள எழுச்சியைப் பார்க்கும்போது புலிகள் மீதான தடையினை அரசு விரைவில் நீக்கும் நிலை ஏற்படும் என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது.

விடுதலைப் புலிகள் மீதான தடையினை உள்ளூரில் அரசு நீக்கும் போது புலிகளைத் தடைசெய்துள்ள சர்வதேச சமூகம் வெட்கித் தலை குனியும். விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் காரணமாகவே தமிழினத்தை இன்று உலகம் திரும்பிப் பார்க்கின்றது.

'பொங்கு தமிழ்' நிகழ்வு சிறுபான்மைத் தமிழ் மக்களது அரசியல் வரலாற்றில் புதிய திருப்பமாகும். இதுவரைகாலமும் ஆயுதப் போராட்டத்தினால்தான் அரசுக்குத் தலையிடி இருந்து வந்தது. ஆனால் இன்று 35 லட்சம் மக்கள் வீதியில் இறங்கிப் போராடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய எழுச்சி நிகழ்வுகள் வடக்கு - கிழக்கில் மட்டுமல்ல மலையகத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வடக்கு - கிழக்கு தமிழர்கள், மலையகத் தமிழர்கள் என்றில்லாமல் அனைவரும் ஒரே குலமாகக் கருதப்படவேண்டும். இதுவே எனது எண்ணமாகும். மலையக மக்களின் உணர்வுகளும் ஒன்றாகப் பேணப்படவேண்டும். அதற்கான வேலைத்திட்டத்தை நாம் கொண்டு செல்லவேண்டும்.

வடக்கு - கிழக்கு மக்களுக்கு உரிமை கிடைத்தால் முதலில் மலையகத்திலுள்ள 15 லட்சம் மக்களே மகிழ்ச்சி அடைவர்.

- என்று அவர் உரையில் தெரிவித்தார். (ஒ-7-164)

# காரைநகர் பயணிகள் மீதான கெடுபிடிகள் குறையவில்லை!

யாழ்.குடாநாட்டில் உள்ள சோதனைச் சாவடிகளில் சோதனைகள், கெடுபிடிகள் நீக்கப்பட்டபோதிலும் காரைநகருக்கான போக்குவரத்தின் போது கடற்படையினரின் சோதனைச் சாவடிகளில் நீண்டதூரம் நடந்துசெல்லுதல் போன்ற நெருக்கடிகள் இதுவரை தளர்த்தப்படாமை குறித்து இப்பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

காரைநகருக்குச் செல்வோர் மூளாய் கடற்படை சோதனைச் சாவடியில் இறக்கப்பட்டு உடற் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் 100 யார் தூரம்வரை நடந்து சென்ற பின்னரே வாகனங்களில்செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

அதேபோன்று பொன்னாலைச் சந்தியில் இருந்து 150 யார் தூரத்தில் போக்கு வரத்து வாகனங்கள் நிறுத்தப்பட்டு பொன்னாலைச் சந்தி வரை மக்கள் அனைவரும் நடந்து சென்று அங்கு அனைத்துப் பொருள்களும் கடுமையாகப் பரிசோதிக்கப்பட்டு பின்னர் உடற்பரிசோதனையும் இடம் பெறுகிறது. கடற்படையினரின் 'பாஸ்' அனுமதி பெற்றே காரைநகருக்கான பயணத்தைத் தொடர கடற்படையினரால் அனுமதிக்கப்படுகின்றது.

காரைநகரில் வதிவதற்கான நிரந்தர அனுமதி பெறாதவர்கள் காரைநகருக்குச் செல்வதற்கு ஒரு நாள் அனுமதி மட்டுமே வழங்கப்படுகின்றது. அவர்கள் அன்றைய தினமே திரும்பிவிடவேண்டும்.

அவசர தேவைகள், உறவினர்களின் இல்லங்களில் நடைபெறும் வைபவங்களுக்காகச் செல்வோர் காரைநகர் கிராம சேவையாளர்களின் சிபார்சுடன் ஒன்று அல்லது இரண்டு நாள் மட்டும் அங்கு தங்குவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்த நடைமுறைகள் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டுவருவதால் கடமையின் நிமித்தம் தினமும் காரைநகருக்கு வரும் நூற்றுக்கும் மேற்பட்ட அரச உத்தியோகத்தர்களும், பொது மக்களும் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். போக்குவரத்தில் நீண்ட நேரத்தையும் செலவிட நேரிடுவதாகக் கவலை தெரிவித்தனர். (ஐ-73)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

யமுனாப்பாரி ஆடும் கடாய் ஆட்டுக்குட்டியும் மூன்று மாதங்கள் நிரம்பிய பெண் பொமேரியன் நாயும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: லிங்கமூர்த்தி மயூரன், நவாலி, அரசடி, மானிப்பாய். (1246)

2031 SONY கலர் 20" T.V, PANASONIC (SUPER DRIVE) டெக், CASIO CTK-100. ஓர்கன் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி.உதயன், 73, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். T.P.No:-2782. (1200)

மொறிஸ் மைனர் Car விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.28/1, சோமசுந்தரம் அவெனியு, சுண்டிக்குளி. T.P.2379. (1257)

WEST POINT குளிர்சாதனப் பெட்டி MADE IN U.S.A., DOUBLE DOOR, NO FROST SYSTEM மற்றும் வீட்டுத்தளபாடங்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி J.ஆனந்தராஜா, மே/பா விஸ்வலிங்கம், "பாரிஜாதம்", முன்ஸி வீதி, ஆனைக்கோட்டை. (1197)

LAPTOP COMPUTER TOSHIBA P II 333 MHz 4.3 GB HDD 64 MB MEMORY, MULTIMEDIA, 56 K MODEM = 100,000/=. TOSHIBA P II 266 MHz 4GB HDD 32 MB MEMORY, MULTIMEDIA, 56 MODEM, CANON INK PRINTER= 105,000/= விலை பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு: T.P.077-319426. (C-20916)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (1144)

தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து தேவையான அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: S.குமரன், இல.227, பிறவுண் வீதி (கலட்டிச் சந்தி அருகில்), யாழ்ப்பாணம். (1240)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள், கல்பேட்ஸ், இறைச்சிச் சேவல்கள், விறாத்துக் குஞ்சுகள் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவகுமார், பருத்தித்துறை வீதி, கட்டைப்பிராய். (1203)

இறைச்சிக்கோழி (Broiler) கல்பேட்ஸ்/சேவல் வேண்டிய நிறைகளில தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (1275)

நிறைகூடிய புறொயிலர், கல்பேட்ஸ், இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. பாதிக்கோழி உட்பட சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டை சந்தி, T.P. 3529, 2867 (1273)

நான்கு மாத வயதுடைய நல்லின கிடாய்க்குட்டிகளும் மறிக்குட்டியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 54, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம். (1271)

## வீடு விற்பனைக்கு

ஏழாலை கிழக்கில் 5 3/4 நிலப்பரப்புடன் கூடிய உறுதியான கல்வீடு விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு: S.ஜெயராஜா, 202, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம். யாழ்ப்பாணம் (1258)

## வீடு வாடகைக்கு தேவை

மருத்துவபீடத்தில் இருந்து ஒரு கிமீசுற்றாடலில் மூன்று பேர் கொண்ட குடும்பம் வசிப்பதற்கு நீர், மின்சார வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: பொ.கந்தசாமி, உதவிப் பதிவாளர், மருத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம், கொக்குவில். T.P.2073. (1245)

## தவறிவிட்டது

சாவகச்சேரி, மீசாலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் குந்தவை என்பவரின் விசேட அடையாள அட்டை (இல. 091035827) அச்சுவேலியிலிருந்து யாழ்ப்பாணம் வரும்போது பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்து உதவவும். (1256)

சிறுதொகைப் பணமும் வருமதி நிலுவைத் துண்டு என்பன அடங்கிய மணிப்பேர்ஸ் ஒன்று 01.03.2002 வெள்ளிக்கிழமை பஸ்நிலையம் சந்திக்கும் காட்டுக்கந்தோர் ஒழுங்கைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 16, காட்டுக்கந்தோர ஒழுங்கை, சுண்டுக்குளியில் வசிக்கும் லோக குகதாஸன் என்பவரிடம் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (1272)

## வகுப்புகள்

தரம் 5-11 கணிதம், ஆங்கிலம் வகுப்புகள் 15 வருட சேவையுள்ள பட்டதாரி ஆசிரியரால் நடத்தப்படுகின்றன. தொடர்பு: அஞானசம்பந்தன் B.Sc., 67, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (1278)

## திருமண சேவை

கம்பியூட்டர் மூலம் உங்கள் சாதகங்கள் மிகத் துல்லியமான முறையில் கணித்துக்கொடுக்கப்படும். அத்துடன் எண், சிறகலன், திருமணப்பொருத்தம் என்பன பார்க்கப்படும். நேரம்: காலை 8.30 - 11.00, மாலை 3.00 - 6.00. தொடர்பு: நா.கந்தையா, சதுர்வித ஜோதிட நிலையம், சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (787)


அப்பிள் பழம்

விற்பனைக்கு உண்டு

மொத்தமாகவும்

சில்லறையாகவும்

பெற்றுக் கொள்ளலாம்.

ராஜா ஸ்ரோர்ஸ்

153 மின்சார நிலைய வீதி, (பஸ்நிலையம்) யாழ்ப்பாணம். (1268)


## தீவகத்தில் பயிரழிவு

நெடுந்தீவு,மார்ச்3

அண்மையில் பெய்த பெருமழையினால் வேலணை பிரதேச செயலர் பிரிவில் 9346 பரப்பு நிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பயிர்கள் அழிந்துவிட்டதாகவும் -

இதில் 493 விவசாயிகள் நஷ்டமடைந்ததாகவும்-

வேலணை பிரதேச செயலக திட்டப் பணிப்பாளர் ரி.தெட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

வேலணை கமநல கேந்திர நிலையப் பிரிவைச் சேர்ந்த 12 விவசாய சம்மேளனங்கள் மற்றும் புங்குடுதீவு, நயினாதீவு கமநல கேந்திர நிலையப் பிரிவுக்கு உட்பட்ட நான்கு சம்மேளனங்களுமாக பதினாறு விவசாயச் சம்மேளனப் பிரிவுகளில், நெல் 3121 பரப்பிலும், புகையிலை 4395 பரப்பிலும், மிளகாய் 966 பரப்பிலும், வெண்காயம் 752 1/2 பரப்பிலும், ஏனைய பயிர்கள் 171 பரப்பிலும் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது. (ஒ-111)

## சாவகச்சேரி நூலகம் மீசாலையில் ஆரம்பம்

சாவகச்சேரி,மார்ச்3

சாவகச்சேரி நகரசபையின் பொது நூல் நிலையம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் மீசாலையில் உள்ள தனியார் கட்டடமொன்றில் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

இடம்பெயர்வின் பின்னர் இந்தப் பொது நூல்நிலையம் நெல்லியடியில் இயங்கிவந்தது. மீசாலையில் மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதைப்படுத்து பொது நூல்நிலையத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்3

எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் அஞ்சல் வாக்காளர்களை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (ஒ-10)

## அல்வாயில் நாய்களுக்கு தடுப்பூசி

தென்மராட்சி,மார்ச்3

பருத்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட அல்வாய் பொதுச் சுகாதார பரிசோதகர் பகுதியில் எதிர்வரும் 6ஆம் திகதி வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி மருந்து ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 9.00 மணிதொடக்கம் 11.00 மணிவரை திக்கம் மத்திய சனசமூக நிலையத்திலும் காலை 11.30 மணிதொடக்கம் 1.00 மணி வரை அல்வாய் தெற்கு மனோகரா சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி மருந்து ஏற்றப்படுமென அல்வாய் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சிநகுலேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஒ-117)

## 6ஆவது ஆண்டு நீங்காத நினைவும் மாறாத சோகமும்

ஆண்டவன் தந்தார் 1979 - 07 - 01



அவரே அணைத்தார் 1996 - 03 - 03

### செல்வன் மகேந்திரன் பிரேமானந்

எமது அன்புச் செல்வமே! பிரேம்!!
ஆறு ஆண்டுகள் கழிந்தாலும்
ஆறாது எம் மனம்! தீராது எமது கவலை!!
மாறாது எமது சோகம்.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய பகவானைப் பிரார்த்திக்கின்றோம்.*

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

நிரந்தர முகவரி: 26/2, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

தற்காலிக முகவரி: சந்தனமாதா கோயில் ஒழுங்கை, பாண்டியந்தாழ்வு. (1276)

பிரிவால் துயருறும்: அப்பம்மா, அப்பா, அம்மா, சகோதரங்கள், சித்தப்பா, மாமாமார், அத்தைமார், மச்சாள், அத்தான்மார்.


# YOGI HOME SCIENCE ACADEMY

வட்டுக்கோட்டையிலும், யாழ்ப்பாணத்திலும் குறுகிய கால புதிய வகுப்புகள் மார்ச் 9ஆம், 16ஆம் திகதிகளில் ஆரம்பமாகவுள்ளன.

1. இலகு வழித் தையல் முறைகள்
2. கேக் ஐசிங்
3. சமையற்கலை
4. மேலைத்தேய ஐசிங் அலங்காரங்களும் மாச்மீனி மலர் அலங்காரங்களும் (Fondant Icing Structures & Sugar Flowers)
5. முக ஒப்பனையும் தலை அலங்காரங்களும் (15 வகுப்புகள் மட்டும்)
6. பூக்கள் தயாரித்தலும் அலங்கரித்தலும்
7. துணியில் வர்ண அலங்கரிப்பு (Fabric Paintings - 10 வகுப்புகள் மட்டும்)

யாழ்ப்பாணத்தில் 09.03.2002 அன்று.
வட்டுக்கோட்டையில் 16.03.2002 அன்று.

லீலா இரட்ணசபாபதி "திருமகள் வாசம்" பிரதான வீதி, (வட்டு.தபால் நிலையத்திற்கு அருகில்) வட்டுக்கோட்டை. (1277)

இரு இடங்களிலும் சேரவிரும்பும் மாணவிகள் யாழ்ப்பாணத்தில் உடன் தொடர்புகொள்ளவும்: 75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### பொதுப் பட்டமளிப்பு விழா - 2002

யாழ்.பல்கலைக்கழக பொதுப்பட்டமளிப்பு விழா எதிர்வரும் 2002-03-16ஆம் திகதி ஐந்து அமர்வுகளில் நடைபெறும்.

இப்பட்டமளிப்பு விழாவில் நேரடியாகப் பட்டம் பெறுவோர்க்கு 2002-03-05ஆம் திகதி தொடக்கம் 2002-03-08ஆம் திகதிவரை காலை 9.30 - 12.00 மணிவரையும், மாலை 1.30 - 3.30 மணிவரையும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்விக்கிளையில் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும். பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றுவதற்காகப் பணம் செலுத்திய பற்றுச்சீட்டினைக் காண்பித்து பின்வரும் திகதிகளில் அங்கிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

| திகதி | நேரம் | பட்டம் |
|---|---|---|
| 2002-03-05 | காலை 9.30 - 12.00 | தொழில் நிர்வாகமாணி |
| | பிற்பகல் 1.30 - 3.30 | முதுதத்துவமாணி - முதுமெய்யியல்மாணி |
| 2002.03.06 | காலை 9.30 - 12.00 | வணிகமாணி |
| | பிற்பகல் 1.30 - 3.30 | விவசாய விஞ்ஞானமாணி, விஞ்ஞானமாணி |
| 2002.03.07 | காலை 9.30 - 12.00 | மருத்துவமாணி, சத்திரசிகிச்சைமாணி |
| | பிற்பகல் 1.30 - 3.30 | நுண்கலைமாணி (இராமநாதன் நுண்கலைக்கழகம்) |
| 2002.03.08 | காலை 9.30 - 12.00 | கலைமாணி |
| | பிற்பகல் 1.30 - 3.30 | முதுகல்வியியல்மாணி |

பட்டமளிப்பு விழாவில் புகைப்படம் எடுப்பதற்கான கட்டணமாக ரூபா 350 (போட்டோ ஒன்றுக்கு) பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்திய பற்றுச்சீட்டினைப் சமர்ப்பித்தல் வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
01.03.2002. (C/20932) - பதிவாளர்.

## 33ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 1915 - 04 - 20



உதிர்வு 2002 - 01 - 31

### அமரர் சங்கரப்பிள்ளை அரியகுட்டி

திதி: 03.03.2002

*அன்பின் திருவுருவே! எம் பாசத்தின் ஒளிவிளக்கே! நீங்கள் எம்மைப் பிரிந்து சென்றாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டு அகலாது.*

உங்கள் பிரிவால் துயருறும்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இணுவில் மேற்கு. (1274)

# மாணவர் புதிய கல்வி முறையினால் சகல துறைகளிலும் அறிவு பெறுகின்றனர்

## முன்னாள் கல்வி அதிகாரி தெரிவிப்பு

தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கட்டாயக் கல்வி முறையானது அனைத்து மாணவர்களும் கல்வியில் மட்டுமன்றி சகல துறைகளிலும் பூரண அறிவைப் பெற்றுக் கொள்ள உதவுகின்றது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தெல்லிப்பழைக் கல்விக்கோட்ட முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கம்.

அண்மையில் நடைபெற்ற தெல்லிப்பழை நடேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்:

கட்டாயக் கல்வி முறையானது விளையாட்டுமுறை மூலமான கற்பித்தல், மகிழ்ச்சிகரமான கற்பித்தல் என இருவகையாக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மாணவர்கள் பூரணமான அறிவைப் பெ. றுக்கொள்ள முடியும்.

விளையாட்டுமுறை மூலம் கற்பித்தல் ஊடக மாணவர்களுக்கு விளையாட்டோடு இணைந்த கல்வி புகட்டப்படுகிறது. மாணவர்களது விளையாட்டுப் போட்டிகளிலே நாம் அவர்களின் மூளைக்கு விருந்தாகக் கூடிய - அறிவியல் சார்ந்த போட்டிகளை நடத்தவேண்டும்.

அனைத்து மாணவர்களும் புத்தகக் கல்வியிலும் பார்க்க விளையாட்டுக் கல்வியில் அதிக அக்கறையுடன் பங்குபற்றுவதாக கவனிக்கக் கூடியதாக உள்ளது.

"மகிழ்ச்சிகரமான கற்றல்" என்பது மாணவர்களுக்கு இன்பத்தைக் கொடுக்கக் கூடிய கல்விசார்ந்த சுற்றுலாக்களை மேற்கொண்டு அதன் மூலமான விளக்கங்களை அறிந்து கல்வி புகட்டுவதாகும்.

இந்த முறைகள் மாணவர்களின் கல்வியிலும் ஏனைய துறைகளிலும் மிகுந்த ஆர்வம் கொள்ளவைக்கின்றது. இவ்வாறு அவர் தெரிவித்தார். இந்த நிகழ்வில் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட தெல்லிப்பழைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலன் தமது உரையில் கூறியதாவது:

விளையாட்டு நிகழ்வுகளின் மூலமாக மாணவர்களது ஆளுமை வளர்கின்றது.

அதுமட்டுமன்றி பல மாணவர்கள் இப்போட்டிகளுக்கு தலைமை தாங்கி நடத்தும்போது அவர்களிடம் தலைமைத்துவப் பண்பு வளர்கின்றது.

விளையாட்டுப்போட்டிகளின் போது அனைத்து மாணவர்களும் பங்குபற்றக்கூடியவாறு ஒழுங்கமைக்கப்படவேண்டும். அதன்மூலம் அவர்களின் உளரீதியான தாக்கங்கள் தவிர்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-4)

---

# நகரசபையின் நாய்பிடிவண்டியை இரண்டு ஆண்டுகள் பாதுகாத்தவர்

## மீண்டும் அதிகாரிகளிடம் ஒப்படைத்தார்

சாவகச்சேரியில் யுத்தம் இடம் பெற்ற வேளையில் இனந்தெரியாதோரால் கொண்டு செல்லப்பட்டு பின்னர் கைதடியில் கைவிடப்பட்ட சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான நாய்பிடிக்கும் வண்டிலைப் பாதுகாத்து வைத்திருந்த கைதடி வாசியொருவர், இரண்டு வருடங்களின் பின் அதனை பாதுகாப்பாக தற்போது அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார்.

தற்போது மீசாலையில் இயங்கும் சாவகச்சேரி நகரசபை உப அலுவலகத் தில் இவ்வண்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்வின்போது சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான உழவு இயந்திரம், தண்ணீர்தாங்கி, குப்பை அகற்றும் வண்டில்கள் ஆகியனவையும் காணாமற்போனமை குறிப்பிடத்தக்கது. (ஒ-8-117)


அரியதோர் சந்தர்ப்பம்!

எரிக் கணேஷ் ஸ்தாபனத்தாரின் விசேட சலுகை!

குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை!

☆ பல் கட்ட

☆ கிளிப் பொருத்த

☆ கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள

எமது கிளை நிறுவனங்களான சுன்னாகம் மற்றும் கொக்குவில் சந்தி ஆகிய கிளைகளில் இச்சலுகை அடிப்படையில் உங்கள் தேவையைப் பூர்த்திசெய்து கொள்ளுங்கள்.

எரிக் கணேஷ்

564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P. 2486

※ உங்கள் எழிலையும், உறுதியையும் மிகைப்படுத்த சங்குப் பற்களினாலான 'பல் செட்'கள்.

(1283)



தாரணி

பிறின்ரேர்ஸ் & ஆட்ஸ்

ஓ(f)செற் பிறின்ரிங், ஸ்கிறீன் பிறின்ரிங்

பொலித்தீன் பாக் பிறின்ரிங்

✣ எழ்ம்பிசு வளப்புயிக்க வண்ண பிளாஸ்ரிக் போட்

✣ கிரெக்ஸ் ✣ ஸ்கூல் பாட்சஸ்

✣ நேம் போட்

என்பவற்றை புதிய பாணியில் நவீன முறையில் கொம்பியூட்டர் வடிவமைத்துச் செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

THARANI PRINTERS & ARTS

541,(319) K.K.S. ROAD, JAFFNA.

(மனோகரா தியேட்டருக்கு அருகாக)

(C-20935)



அராலி வடக்கு

மயிலியப்புலம் கந்தசுவாமி தேவஸ்தானம்

புனராவர்த்தன பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஷ்டா

மஹா கும்பாபிஷேக விழா

முருகன் அடியார்களே!

நிகழும் விஷு வருஷம் பங்குனித் திங்கள் 10ஆந் நாள் 24.03.2002 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.15 மணிமுதல் 12.15 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் பெருமானுக்கு, மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

பிரதிஷ்டா பிரதமகுரு :-

சிவஸ்ரீ சரவணபவ செல்வகுமாரக்குருக்கள்

முருகன் அடியார்கள் அனைவரும் பெருமானைத் தரிசித்து உய்தி பெற வேண்டுகிறோம்.

(1282) - ஆலய பரிபாலன சபையினர்.


## குடாநாட்டில்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

யானைத் தந்தத்தில் செய்யப்பட்ட புத்தர் சிலைகள் மிகவும் அழகாக அமைக்கப்பட்டுள்ளன. இவை 12ஆம் நூற்றாண்டுக்குரிய வேலைப்பாட்டை உடையன. போர்க்களங்களில் முழங்கிய சங்குகளும் காணப்படுகிறது.

1980ஆம் ஆண்டு அல்லைப்பிட்டியில் அகழ்வின்போது மீட்கப்பட்ட - சீன தேசத்தின் 5ஆம் நூற்றாண்டிற்குரிய கப்பலில் இருந்து பெறப்பட்ட - சாடிகள் மற்றும் பொருள்களும் இங்குள்ளன. இதைவிட மன்னர்கள் போர்க்களங்களில் பயன்படுத்திய கத்திகள், ஈட்டிகள், வாள்கள் என்பன பாதுகாக்கப்படுகின்றன.

இதைவிட கிறிஸ்தவர்களது ஞானஸ்தானத்தொட்டி, திருக்கேதீச்சரத்தில் எடுக்கப்பட்ட தீர்த்தத்தொட்டி என்பன பாரிய கல்லில் நுட்பமாகக் குடைந்து எடுக்கப்பட்டிருப்பதனைக் காணமுடிகிறது.

இவற்றினை மாணவர்கள் ஒவ்வொருவரும் நிச்சயமாக அறிந்திருக்கவேண்டும்.

ஆண்டு மூன்றில் இருந்து சிங்கள மாணவர் 'இது சிங்கள பூமி' எனக் கற்கும் நிலையில், தமிழ் மாணவர்கள் எமது தாயகம் பற்றித் தெரிந்து கொள்வதற்கு இத்தகைய வரலாற்றுப் பொருள்களின் மீட்பும், பாதுகாப்பும் அவசியமானதாகும்.

கந்தரோடை அரும்பொருள் காட்சியகத்தில் சென்று விசாரித்த போது சுற்றுலாவிற்கு வருபவர்கள் கூட கந்தரோடையைச் சுற்றிப் பார்ப்பதும், படம் எடுப்பதுடனும் திரும்பி விடுவதாகவும் நூதனசாலைக்கு வருவோர் குறைவு எனவும் தெரிவித்துள்ளார்கள். இந்த நிலை மாறவேண்டும்.

உண்மையான வரலாற்று உணர்வு மக்கள் மனங்களில் குடியேறவேண்டும்.

தென்பகுதி நூதனசாலை ஊழியருக்கு வழங்கப்படுவது போன்ற பயிற்சியோ, ஆய்வோ இங்குள்ள ஊழியர்கள் பெற்றுக்கொள்ள வழி செய்யப்படவில்லை. இந்தக் குறைபாட்டை நீக்குவதும் அவசியமானதாகவே உள்ளது.

தமிழர் கலை, பண்பாடு, பாரம்பரியங்களைப்பேணும் அவசியத்தினை உணர்த்தும் தொல்பொருள் மையங்களை இனியாவது எம்மக்கள் நாடிச் செல்வார்களா? அழிந்து கொண்டிருக்கும் தமிழரின் பாரம்பரியச் சான்றுகளைப் பாதுகாக்க ஆசிரியர்களும், பெற்றோர்களும் இத்தகைய நூதனசாலைகளைப் பயன்படுத்தி தமிழரின் வரலாற்றை இளைய தலைமுறை அறிந்துகொண்டு பெருமை சேர்க்க உதவுவார்களா?

"பண்பாடும், வரலாறும் பாதுகாக்கப்படும்போதுதான் ஓர் இனம் உலகில் அழியாது நிலைத்து வாழ்கிறது" என்பது சான்றோர்வாக்கு. ✦

---

# ஜி.சீ.ஈ உயர்தர பரீட்சையினால் பாடசாலை தவணைகளில் மாற்றம்

கொழும்பு,மார்ச்3

எதிர்வரும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையினை ஏப்ரல் மாதம் நடத்த பரீட்சைத் திணைக்களம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதால் பாடசாலைத் தவணை நாள்களில் கல்வி அமைச்சு மாற்றம் செய்துள்ளது.

கல்வி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பாடசாலைத் தவணைநாள்களின் விவரங்கள் வருமாறு,

முதலாம் தவணை ஜனவரி 02 முதல் ஏப்பிரல் 10 ஆம் திகதிவரையும், இரண்டாம் தவணை மே 1ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 16ஆம் திகதி வரையும், 3ஆம் தவணையில் மாற்றம் எதுவுமில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சை நிலையங்களாகக் கொண்டிராத பாடசாலைகள இரண்டாம் தவணையாக ஏப்ரல் 29 ஆம் திகதி முதல் ஜூலை 31ஆம் திகதி வரையும் நடைபெறும். உயர்தரப் பரீட்சை நிலையங்களாக செயற்படும் பாடசாலைகள் இழக்கப்படும் பாடசாலை நாள்களை ஈடுசெய்வதற்கு மேலதிக நாள்களில் பாடசாலையை நடத்த வேண்டு மெனவும் அறிவிககப்பட்டுள்ளது. (ஒ-ரி)

## வலி.வடக்கு மக்கள் மாவையுடன் சந்திப்பு

சுன்னாகம்,மார்ச்3

வலி.வடக்குப் பிரதேச மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசாவுடன் சந்திப்பு ஒன்றை இன்று நடத்த உள்ளனர்.

இந்தச் சந்திப்பு இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30மணிக்கு தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் கோயிலுக்கு அருகிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் பணிமனையில் இடம் பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-27)

# தென்மராட்சியில் மீண்டும் மின்சார சபைப் பணிமனை

சாவகச்சேரி,மார்ச்3

இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரிப் பணிமனை மீசாலை - புத்தூர்ச் சந்தியருகில் தனியார் கட்டடமொன்றில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபை ஊழியர்கள் மீசாலைப் பகுதிக்கு மின்சாரம் விநியோகிப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள் ளனர்.

இப்பகுதியில் போர் அனர்த்தத்தால் சேதமான மின்கம்பிகளைப் பொருத்துதல், மின் மார்க்கத்திற்கு இடைஞ்சலாக உள்ள மரக்கிளைகளை வெட்டுதல் போன்ற பணிகளில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

முதற்கட்டமாக ஜெனரேட்டர் மூலமே மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது ஏற்கனவே பொருத்தப்பட்ட ஜெனரேட்டர் மூலம் கொடிகாமம் பகுதிக்கு - மின்சாரம் வழங்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.(ஒ-31)

## ஆய்வு கூட பணியாளர் பதவியுயர்வுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,மார்ச்3

வட-கிழக்கு மாகாணத்திற்குட்பட்ட பாடசாலைகளில் ஆய்வுகூட பணியாளர் தரம் III இலுள்ள ஊழியர்களை உதவியாளர் தரம் II இற்கு பதவியுயர்துவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியானவர்கள் தங்களது கல்வித் தகைமை, அனுபவம் என்பற்றுடன் கூடிய விண்ணப்பத்தினை வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-ரி)

## கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்3

யாழ்.மாவட்ட கல்வி வலயங்களில் கடமை புரியும் இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் விவரங்கள் மேலதிக மாகாணப் பணிப்பாளரினால் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான விவரங்களை சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களும் உடனடியாக அனுப்பிவைக்குமாறு மேலதிக மாகாணப்பணிப்பாளரினால் கோரப்பட்டுள்ளது. (ஒ)

## மத போதகர் வருகை

கொழும்பு,மார்ச்3

உலகப் புகழ்பெற்ற கத்தோலிக்க மதபோதகர் வணக்கத்திற்குரிய பிதா ஜேம்ஸ் மஞ்சேககார் 12நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வருகிறார்.

இவர் கேரளாவை மையமாகக் கொண்டு இயங்கும் 'கரிஸ் பவன்' என்ற ஸ்தாபகத்தின் தலைவராவார். சுமார் 40 நாடுகளில் குறைதீர்க்கும் சேவைகளினை நடத்திய இவர் முதல் தடவையாக இலங்கை வருகிறார்.

# மரண அறிவித்தல்கள்

## முத்துத்தம்பி அருணாசலம் (மாஸ்ரர்)

யாழ்ப்பாணம், சுதுமலை தெற்கு, முத்துத்தம்பி ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியருமாகிய முத்துத்தம்பி அருணாசலம் மாஸ்ரர் அவர்கள் Settle, Washington, U.S.A.இல் கடந்த புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் யாழ்.இராமநாதன் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் திருமதி இராசநாயகம் அருணாசலத்தின் அன்புக் கணவரும் சிவகுமாரி (சிவானி), மோகனின் அருமைத் தந்தையும் சிவமோகனின் (மோகனச்சந்திரன்) அன்பு மாமனாரும் மாதினி, பாலன், அழகன் ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் காலஞ்சென்ற சுவாமிநாதன், இராமநாதன், பூமாலச்சுமி, அன்னலிங்கம், காலஞ்சென்ற பேராயிரவர் ஆகியோரின் அரிய சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.03.2002) திங்கட்கிழமை Settle இல் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2823, 204th Street,*
*South East,*
*Bothell,*
*Washington 98012,*
*U.S.A.*

தகவல்:
சிவகுமாரி மோகன் (சிவானி)

(சி-20937)

## திருமதி உமையம்மா சின்னத்தம்பி

வரணி கரம்பைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உமையம்மா சின்னத்தம்பி அவர்கள் 28.02.2002 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் யோகலட்சுமி, மல்லிகா (லண்டன்), சறோ, சிவா, தாசன் (லண்டன்), சத்தியசீலன், நீலாவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவகுமார், ரகுவரன் (லண்டன்), குஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*8/6, பெருமாள் கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(1286)

தகவல்:
K.சிவகுமார்
('அப்புச்சி' மருமகன்)

# ஏனைய பிரதேசங்களில் கிடைக்கும் கல்வி வசதி எமக்கும் தரவேண்டும்

## அமைச்சரிடம் சித்த மாணவர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்3

நாட்டின் மற்றைய பிரதேசங்களில் உள்ள மாணவர்களுக்கு அரசு ஏற்படுத்திக்கொடுத்துள்ள வசதிகளைப் போன்று தமக்கும் தருமாறு யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்த மூன்றாம் நிலைக் கல்விக்கான அமைச்சர் கபீர் காசிமிடம் இது தொடர்பான மகஜர் ஒன்றை ஒன்றியப் பிரதிநிதிகள் கையளித்தனர்.

அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

ஏனைய மாவட்டங்களில் உள்ள சித்தமருத்துவ மாணவர்கள் அனுபவிக்கும் வசதிகள் மற்றும் சலுகைகள் எமக்கு இன்னமும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதனால் போரின் பாதிப்புக்குட்பட்ட எமது யாழ்.மாவட்ட மாணவர்கள் தமது கல்வியில் பல கஷ்டங்கள், சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

### கல்வி செயற்பாடுகளில் தளர்வு

★ வழமையாக 100 மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றபோதிலும் இவர்களுக்கான விரிவுரைகள் இன்னமும் வாடகைக்கு எடுக்கப்பட்ட வீடுகளிலேயே நடத்தப்படுகின்றன. இவற்றுக்குரிய சுகாதார நிலைமைகள் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றன.

★ தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆய்வுகூட வசதிகளோ விரிவுரையாளர்களின் எண்ணிக்கையோ போதுமானதாக இல்லாததுடன் மாணவர்கள் தமது செயல்முறைப் பயிற்சிகளுக்கு வெளிமாவட்டங்களை நாட வேண்டிய நிலையிலுள்ளனர்.

★ தற்போதைய சூழ்நிலையின் பிரகாரம் கைதடியில் இருந்து இடம்பெயர்ந்து குளப்பிட்டியில் இயங்கும் சித்த போதனா வைத்தியசாலையில் போதியளவு மருத்துவ உபகரண வசதிகளோ மருந்து வகைகளோ காணப்படாததுடன் வாட் வசதிகளும் இல்லாத நிலையே காணப்படுகின்றது. இதன்மூலம் 3ஆம், 4ஆம், 5ஆம் ஆண்டுகளில் உள்ள மாணவர்கள் தமது செயன்முறைப் பயிற்சிகளை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். இறுதி வருட மாணவர்கள் தமது செயன்முறைப் பயிற்சிகளுக்கு கொழும்பு செல்லவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

★ கட்டட வசதிகள் இன்மையால் மாணவர்கள் தங்குவதற்கு பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்குவதுடன் வெளிச் செயன்முறைகளுக்கு மாணவர்களுக்கு வாகன வசதியும் இல்லாத நிலையும் காணப்படுகிறது.

### வேலை வாய்ப்பின்மை

★ பல இன்னல்களுக்கு மத்தியில் 5 வருடங்கள் கல்வி கற்று ஒரு வருட உள்ளகப் பயிற்சியை முடித்துக்கொண்ட மாணவர்கள் தமது வேலையை பெற்றுக்கொள்ள பல வருடங்கள் காத்திருக்கவேண்டியுள்ளது.

★ யாழ். மாவட்டத்தில் நோயாளர்களுக்கு சித்த மருத்துவ சிகிச்சைகளை முழுமையாக வழங்குவதற்கு போதிய ஆளணி, உபகரணங்கள் அற்ற பரிதாபகரமான நிலை தொடர்கிறது.

★ சித்த மருத்துவத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஆய்வு நிலையம் இல்லாததோடு சித்தமருத்துவப் பட்டதாரிகள் தமது கல்வி தொடர்பாக ஆய்வு செய்யமுடியாதுள்ளது.

எனவே மேற்கூறப்பட்ட காரணங்களை கவனத்தில் கொண்டு யாழ். சித்தமருத்துவ மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகவும் மக்களின் நலனுக்காகவும் சித்த மருத்துவத்துறையின் வளர்ச்சிக்கு ஆவன செய்ய வேண்டும்.

- இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி)

## மகளிர் இல்லத்தின் ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்3

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிறுக்கிழமை காலை 9.30மணிக்கு சிவத தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் திருமதி கலைவாணி இராமநாதனும், சிறப்பு விருந்தினராக மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய அதிபர் செல்வி கெங்காமலர்தேவி சின்னையாவும் கலந்துகொள்வர். (ஐ-9)

## சின்னக்கடை வீதி விரைவில் திறக்கப்படும்

குருநகர்,மார்ச்3

மக்கள் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருந்த சின்னக்கடை வீதி நேற்றைய தினம் படையினரால் துப்புரவு செய்யப்பட்டு அங்கு போடப்பட்டிருந்த தடைகள் யாவும் அகற்றப்பட்டுள்ளன. இவ் வீதியூடாக வெகுவிரைவில் மக்கள் போக்குவரத்துச் செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-51)

## பலாலி ஆசிரியர் கலாசலை மாணவருக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்3

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் வணிகத்துறை மாணவர்கள் நாளை திங்கட்கிழமை மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் மற்றும் கீரிமலை நகுலேஸ்வரம் கோயில் ஆகியவற்றிற்கு தல யாத்திரை ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இதற்காக குறிப்பிட்ட மாணவர்கள் அனைவரையும் நாளை காலை 6.30 மணிக்கு பயண ஆயத்தங்களுடன் கலாசாலைக்கு வருகைதருமாறு வணிகத்துறைத் தலைவர் திருமதி கோதை நகுலராஜா கேட்டுள்ளார். (ஒ-10-27)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் இன்று சிரமதானம்

சாவகச்சேரி,மார்ச்3

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை சிரமதான முறையில் துப்பரவு செய்யப்படவுள்ளது. இந்நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது. இச்சிரமதானப் பணியில் பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், வைத்தியசாலை ஊழியர்கள் எனப் பலர் பங்குபற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-31)

## நாவற்குழியில் கலந்துரையாடல்

நாவற்குழி மகாவித்தியாலயத்தை மீண்டும் சொந்த இடத்தில் ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நாவற்குழி மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தவர்கள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் பி.முத்துலிங்கம் கேட்டுள்ளார். (ஐ-9)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

03.03.2002




பிரான்ஸில் வசிக்கும்
திரு.திருமதி பிரபாகரன் - புவனேஸ்வரி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்

### அபிஷேக்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (03.03.2002) ஞாயிற்றுக்கிழமை தனது பிரான்ஸ் இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, இலங்கையில் வசிக்கும் அப்பம்மா, அப்பப்பா, சுதா சித்தப்பா, உதயம் சித்தி, அனுஷன் அண்ணா, கயல்விழி அக்கா, உஷா அத்தை, நோர்வேயில் வசிக்கும் சாந்தினி அத்தை, முரளி மாமா, பிரான்ஸில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, தயா சித்தப்பா, கொழும்பில் வசிக்கும் சுபா சித்தி மற்றும் அத்தைமார், அண்ணாமார், அக்காமார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் சொர்ணவடலிப் பிள்ளையார் அருள்பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

*பூநாறி வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

(1295)

தகவல்:
சுதாகரன்
(சித்தப்பா)

---

உ

## மீண்டும் ஆரம்பம்...!

# பிள்ளையார் களஞ்சியம்

### சாவகச்சேரி

எமது பிள்ளையார் களஞ்சியம் 27.02.2002 புதன்கிழமைமுதல் கண்டி வீதி, சாவகச்சேரியில் இயங்கிவருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

★ விவசாயப் பொருள்கள் ★ விவசாய மருந்துகள்
★ ஹாட்வெயர் பொருள்கள் ★ சீமெந்து ★ சீற்

என்பனவற்றை எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

பிள்ளையார் களஞ்சியம்,
கண்டி வீதி, சாவகச்சேரி.

க.மகாலிங்கம்
(உரிமையாளர்)

(1296)

---

## தேவாவின் 51ஆவது அகவை



மார்ச் 10இல் 51ஆவது அகவையைக் கொண்டாடும்
உயர்திரு. **க.தேவராஜா** (வணிகத்துறைத் தலைவர் யாழ்.பல்கலைக்கழகம்)

கொள்கையோடிணைந்த வாழ்வும் கோபங்கொண்டறியா நோக்கும்
நல்லநேர் சமூகசேவை நாட்டமும் கொண்டெம் ஊரின்
பள்ளிகள் - கோயில் - மக்கட் பணிகளில் மனம் மெய்யாக
உள்ளிருந்(து) ஊறும் அன்பால் உயர்ந்த நம் தேவர் வாழ்க!

P.சம்பந்தன்
வர்த்தக ஆசிரியர்,
யாழ்.மத்திய கல்லூரி.

---

# வீடு விற்பனைக்கு

யாழ். கச்சேரிக்குச் சமீபமாக - இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பணிமனைக்கு முன்பாக - கண்டி வீதி, 76/2, இலக்கத்தில் உள்ள வீடும் வளவும் விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்புகொள்ளவும்.

விளம்பரதாரர்,
76/2, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(C/20939)

---

# இதய அஞ்சலி

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்
தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில்
பணியாற்றி வந்தவருமான

## தொண்டர் செல்லையா வல்லிபுரம்

அவர்கள் 02.03.2002 சனிக்கிழமை காலமானார். அவரது இறுதிக் கிரியைகள் அவரது சகோதரியின் சங்குவேலி இல்லத்தில் நேற்று (02.03.2002) சனிக்கிழமை மாலை நடைபெற்றன.

அன்னார் எமது தேவஸ்தானத்தில் ஆற்றிய பணிகளை நினைந்து, அவரது மறைவைக் குறித்து துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தி பெற துர்க்கை அம்பாளை வேண்டுதல் செய்கிறோம்.

*- நிர்வாக சபை*

(1289) ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

---

# மரண அறிவித்தல்கள்

## ஆழ்வாப்பிள்ளை கந்தையா (செல்வம்)

வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வாப்பிள்ளை கந்தையா அவர்கள் நேற்று (02.03.2002) சனிக்கிழமை இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை - அழகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், சந்தானலட்சுமியின் அன்புக் கணவரும், கமலநாதன் (நோர்வே), லோகநாதன் (ஆஸ்திரேலியா), சீதா (இந்தியா), ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திகிரி ஒழுங்கை,*
*தும்பளை,*
*பருத்தித்துறை.*

(1288)

தகவல்:
ஆ.பாலச்சந்திரன் (சகோதரன்)
ஆ.செல்வநாயகம் (சகோதரன்)

## திருமதி செல்லம்மா சின்னத்துரை

காரைநகர், அறுகம்புலத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூர், செட்டித் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சின்னத்துரை அவர்கள் நேற்று(02.03.2002) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சின்னத்துரையின் (பிரபல வர்த்தகர், கல்கமுவ - யாழ்ப்பாணம் - காரைநகர்) அன்பு மனைவியும் திருஞானசம்பந்தன், காலஞ்சென்ற சிவஞானமூர்த்தி(தறுமு), சிவதேவி (கொழும்பு), சாரதாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் அ.அருட்சோதியின்(கொழும்பு) அன்பு மாமியும் துஷ்யந்தன், அஸ்வினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (03.03.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(1293)

தகவல்:
*35, செட்டித் தெரு, நல்லூர்.* சி.திருஞானசம்பந்தன் (மகன்)

## திருமதி ஆறுமுகம் தங்கம்

சிக்னல் மரத்தடி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் தற்போது நிற்சாமம், சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் தங்கம் நேற்று (02.03.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, நாகமுத்து மற்றும் ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், பொன்னர் துரையப்பாவின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று, (03.03.2002) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நிற்சாமம்,*
*சங்கானை.*

(1294)

தகவல்:
முருகேசு நாகேஸ்வரநாதன்

# யாழ். - கொழும்பு பஸ் சேவை பற்றிய செய்திக்கு செஞ்சிலுவைக் குழு விளக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்3

யாழ். - கொழும்பு இடையே தனியார் பஸ் சேவைகளை நடத்த பஸ் உரிமையாளர் சங்கத்துக்கு பாதுகாப்பு உத்தரவாதத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து பெற்றுத் தருமாறு இலங்கை அரசு எந்தக் கோரிக்கையையும் தன்னிடம் இதுவரை விடுக்கவில்லை என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அறிவித்துள்ளது.

யாழ். - கொழும்பு இடையே தனியார் பஸ் சேவைகளை ஆரம்பிக்க விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர். புலிகளின் முழுப் பாதுகாப்பையும் பெற்றுத்தருவதாக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு உறுதியளித்துள்ளது. - என்று அகில இலங்கைத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளதாக கடந்த முதலாம் திகதி உதயனில் வெளியான செய்தி குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகம் செய்திக் குறிப்பு ஒன்றை நேற்று வெளியிட்டது.

இந்த விவகாரத்தில் தமது நிலைப்பாட்டை விளக்கி அந்த அமைப்பு விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். - கொழும்பு பஸ் சேவை தொடர்பாக கடந்த முதலாம் திகதி வெளியான செய்தியில் உண்மை இல்லை.

கொழும்பு - யாழ். பாதையில் பொதுமக்களுக்கான பஸ் சேவையை நடத்துவதற்காக அகில இலங்கைத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் தொடர்புகொண்டது.

இந்தச் சேவைச் ¬ பாதுகாப்பு அனுமதியை விடுதலைப் புலிகளிடம் பெறுவதற்கு அந்த அமைப்பு எம்மிடம் உதவி கோரியிருந்தது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடுநிலையான தொடர்பாளராக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு செயற்படுவதால் இது விடயமாக இலங்கை அரசு முறைப்படி கோரிக்கை விடும் பட்சத்தில் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்துக்கு உதவ ஆவலாக இருக்கின்றோம். இது தொடர்பான கோரிக்கை ஒன்று அரசு ஊடாக விடுக்கப்படுமாயின் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் நடத்தவிருக்கும் பயணிகள் சேவைக்கு பாதுகாப்பு உத்தரவாதத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து பெற்றுக்கொடுப்பதற்கு இரு சாராருக்கும் இடையில் கருவியாகச் செயற்படுவோம்.

அப்படியானதொரு சேவைக்கு வேண்டிய பொதுப் பாதுகாப்பையும் பாதுகாப்பான பயணத்தையும் உறுதிப்படுத்துவதற்கு வேண்டிய வழிவகைகள் பற்றி கலந்தாலோசிப்பதற்கும் தயாராகவிருக்கிறோம்.

இது விடயமாக இலங்கை அரசு இதுவரை உத்தியோகபூர்வமாக எம்மை அணுகவில்லை - என்று செஞ்சிலுவைக் குழு தெரிவித்துள்ளது. (ஐ-3)

## மாணவன் படுகாயம்

யாழ்ப்பாணம்,மார்ச்3

வட்டுக்கோட்டைப் பகுதியில் நேற்று பாடசாலை மாணவர்களுக்கு இடையில் இடம்பெற்ற சம்பவத்தில் மாணவன் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரு பாடசாலைகளைச் சேர்ந்த உயர்தர மாணவர்களுக்கு இடையில் நடந்த அடிதடிச் சம்பவத்திலேயே இவர் இரும்புக் கம்பிகளால் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஐ-6)

## உப அஞ்சலகம் இயங்குகிறது

தென்மராட்சி,மார்ச்3

புலோலியில் இயங்கிய மீசாலை உப அஞ்சல் அலுவலகம் கடந்த வாரம் தொடக்கம் சொந்த இடத்தில் இயங்கி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மீசாலைப் பகுதிக்கான தபால் விநியோகம் இந்த அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## உள்ளூராட்சி ஓய்வூதியம்

தென்மராட்சி,மார்ச்3

யாழ்மாவட்ட உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் பெப்ரவரி மாத ஓய்வூதியக் கொடுப்பனவுகள் நேற்று தொடக்கம் அந்தந்த வங்கிகளில் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தக் கொடுப்பனவுக்குரிய வவுச்சர்கள் கடந்த மாதம் எட்டாம் திகதி ஓய்வூதியர்களுக்கு கிடைத்த போதிலும் கொடுப்பனவுக்குரிய காசோலைகள் நேற்றுத்தான் வங்கிகளுக்குக் கிடைத்தது. இதனையடுத்தே கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# வடக்கு – கிழக்கு மக்களுக்கு இது மகிழ்ச்சியான தருணம்

## மட்டு - திருமலை ஆயர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்3

கடந்த இரு தசாப்த காலமாக தமது நாட்டில் பல கோர நிகழ்வுகளையும் பாரிய அழிவுகளையும் ஏற்படுத்தி வந்த இனப்பிரச்சினையில் தற்போது நல்லதொரு திருப்பம் ஏற்படும் என்ற நம்பிக்கை அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அதி வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

போரால் மிகவும் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கு தற்போதைய போர்நிறுத்த உடன்பாடு மிகுந்த ஆறுதலையும் மகிழ்ச்சியையும் தருகிறது. இது அவர்களுக்கு மகிழ்ச்சியான தருணம்.

கடந்த காலங்களிலும் இது போன்ற போர்நிறுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அவை தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படாததால் இடை நடுவில் முறிந்து போயின.

இந்தத் தடவை தீவிர முயற்சிகளின் பின்னரே இந்தப் போர்நிறுத்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சியில் ஆர்வத்துடனும் உறுதியுடனும் செயற்பட்ட விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் அனுசரணையாளரான நோர்வே சமாதான தூதுக் குழு பிரதிநிதிகளையும் பாராட்டுகின்றேன்.

இவ்வாறு ஆயர் மேலும் தெரிவித்தார். (ஐ-6-9)

# களுத்துறையில் 8 கைதிகள் உண்ணாவிரதம் இருப்பர்!

கொழும்பு,மார்ச்3

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைகக்கப்பட்டுள்ள 8 தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புள்ளதாகக் கூறி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள் 8பேரும் தம்மை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் அல்லது தம் மீதான வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தவேண்டும் எனக் கோரியே உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்துள்ளனர்.

தம்மீதான குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு 2வருடங்களாகிய போதிலும் இதுவரை வழக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்படாத நிலையில் தாம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிததுள்ளனர்.

களுத்துறை சிறையில் மட்டும் 280 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஐ-6-9)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்3

அரியாலை மத்திய இளைஞர்கள் கழகம் நடத்தும் கணேசா வெற்றிக் கிண்ணத்துக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று காலை 9மணிமுதல் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:

☆ காலை 11மணி - சிறி கலைமகள் அணி எதிர் வை.எம்.எச்.ஏ.'பி' அணி

☆ பிற்பகல் 1மணி - மானிப்பாய் பரிஷ் 'நீலம்' அணி எதிர் ஃபோர் ஸ்ரார் அணி

☆ பிற்பகல் 3மணி - புறூடி அணி எதிர் பஷன் அணி.

☆ மாலை 4மணி - அரியாலை 'பி' அணி எதிர் தபால் திணைக்கள அணி. (ஐ-3)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் ஆகியனவற்றின் 50ஆவது பொன் விழாவை முன்னிட்டு நடத்தப்படும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் சிந்து விளையாட்டுக்கழகமும் உரும்பிராய் வைத்தீஸ்வரா வி.கவும் பங்குபற்றுகின்றன. (ஐ-3)

★ ★ ★

உடுப்பிட்டி நாவலர் சனசமூக நிலையத்தின் பொன்விழாவை ஒட்டி த.இராசமலர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டச் சுற்றுபோட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

போட்டிகளில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

☆ குணசேகரா விளையாட்டுக் கழகம் எதிர் சிவகுமரன் விளையாட்டுக் கழகம்,

☆ சிவகுமரன் விளையாட்டுக்கழகம் எதிர் கலைமதி விளையாட்டுக் கழகம். (ஐ-31)

★ ★ ★

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி காலை 6மணிக்கு மரதன் ஓட்டப் போட்டியும் தொடர்ந்து சைக்கிள் ஓட்டப் போட்டியும் நடைபெறும்.

ஆண்கள் மற்றும் பெண்களுக்குத் தனித்தனியாக நடைபெறவுள்ள இப்போட்டிகளில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவை வதிவிடமாகக் கொண்ட இருபாலாரும் பங்குபற்றலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளோர் தமது விண்ணப்பங்களை எதிர் வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்பு பிரதேச செயலக விளையாட்டு அலுவலரிடம் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் கே.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஐ-10)

★ ★ ★

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய ஆரம்ப பிரிவு இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை திங்கட்கிழமை காலை 9மணிக்கு வித்தியாலய முன்றிலில் வித்தியாலய அதிபர்.கா.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும் சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற வலி. மேற்கு பிரதேச செயலர் க.சந்திரராசாவும் கலந்துகொள்வர். (ஐ-28)

★ ★ ★

மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலயமும், மாதகல் நுணசை வித்தியாலயமும் இணைந்து நடத்தும் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு சென்.ஜோசப் மகாவித்தியாலய மைதானத்தில் பாடசாலை அதிபர் கா.அழகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும் சிறப்பு விருந்தினராக வலிகாம வலய கல்வி முகாமைத்துவ உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும் கலந்து கொள்கின்றனர். (ஐ-9)

★ ★ ★

யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக்கழகம் மணிவதனன் ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்துக்காக யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

☆ காலை 9 மணி - அரியாலை சென்றல் அணி எதிர் மானிப்பாய் பரிஷ் அணி

☆ ஓல்ட் கோல்ஸ் எதிர் ஜொனியன்ஸ் அணி

☆ பிற்பகல் ஒரு மணி - கொக்குவில் ஸி.ஸி.ஸி. 'ஏ' அணி எதிர் கிறாஸ்கொப்பர்ஸ் 'ஏ' அணி

☆ பற்றீஸியன் 'ஏ' அணி எதிர் யாழ்.சென்றல் 'ஏ' அணி (ஐ-3)

# வருமுன் விபத்தினைத் தடுப்போம்!

யாழ்.குடாநாட்டில் பல வீதித் தடைகள் அகற்றப்பட்டு, போக்குவரத்துக்கு சுலபமாக்கப்பட்ட செய்தியை விட நாளாந்தம் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவதை அறிகின்றோம். மோட்டார் வாகனங்கள், துவிச்சக்கர வண்டிகள் ஆகியவற்றின் பாவனை அதிகரித்து விட்டது. பலர் வயது குறைந்தவர்களாக, வாகனம் ஓட்டத் தகுதியற்றவர்களாக இருப்பதை வீதியில் காண்கின்றோம்.

வீதிகளைத் திடீரென் அகலமாக்குவது சுலபமான ஒன்றல்ல. பாவனையில் இருக்கும் வீதிகளை சரியாகப் பயன்படுத்தத் தடையாக பலர் இருக்கின்றனர். வீதி ஓரங்களில் கல், மண், வாகனங்களை விட்டுவிடுவது நடைபாதைகளில் கடைபோட்டு - தடையாக இருப்பது காலத்திற்குக் காலம் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாகவே சாலை விபத்துகளும் அதிகரிக்கின்றன. இதனை நாமே தவிர்த்துக்கொள்ளப் பழகவேண்டும். சட்டத்தினை மதிக்கவேண்டும். வாகனங்கள் வீதியில் இடது கரையால் ஓடவேண்டியது சகலரதும் கடமை. ஒருவர் விதியை மாற்றினால் பலருக்கு இடைஞ்சலை ஏற்படுத்தும். இது 'சகலரும் அம்மைப்பால் கட்டுவது' போன்றது.




யாழ். நகரில் ஒருவழிப் பாதைகளைப் பலர் கடைப்பிடிப்பதில்லை. தற்போது பொலீஸ் உத்தியோகத்தர் கடமையில் இருக்கும்போது மட்டும் கடைப்பிடிக்கின்றார்கள்.

இந்த விடயத்தில் யாழ். மத்திய பஸ் நிலையத்தில் தனியார் நிறுவன பாதுகாவலர்கள் சேவையை வட பிராந்திய போக்குவரத்துச் சபை முகாமை முன்னோடியாக அறிமுகம் செய்தமையால் பல பயணிகள் சிரமமின்றி பயனடைவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. சீருடையில் தொடர்ச்சியாக கடமையில் நிற்கும்போது சாரதிகள், பயணிகள் தாமாகவே வீதி ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்கின்றனர். பல விபத்துக்கள் தவிர்க்கப்படுகின்றன. சன நெரிசல் தவிர்க்கப்படுகின்றது. கொழும்புக்கு பயணிகளை அழைத்து வருபவர்கள் சுலபமாக - கௌரவமாக தமது உறவினர், நண்பரை அழைத்துச்செல்வதற்கு உகந்த ஏற்பாடு சிறப்பாக அமைந்துள்ளது. பிற வாகனங்கள் எதுவும் கொண்டு செல்லாது சாரதிகள் ஒத்துழைப்பளிப்பது காணும்போது முன்னர் சிரமப்படும் நாள்கள் நினைவுக்கு வருகின்றன. இதேபோல் வீதி ஓரங்களில் புதிய கடைகள் கட்டும்போது வாகனம் தரிப்பிற்கு இடம்ஒதுக்கப்பட வேண்டும். நடைபாதைகள் தடையில்லாது பொதுமக்கள் பாவிக்க அனுமதிக்கப்படவேண்டும். நவீன சந்தை உட்புறம் மட்டுமல்ல வீதிகளிலும் இவ்வாறான அமைப்பு உருவாக்கப்படவேண்டும். ஆனால் அவ்விடங்களில் பொருள்களைப் பரவிவிடுவதுதான் தவறு. இப்படி திருநெல்வேலி, சுன்னாகம், சங்கானை, அச்சுவேலி போன்ற இடங்களில் வீதிக்கு இடைஞ்சலாக இருப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. லாண்ட்மாஸ்டர் மற்றும் வாகனாதிகள் எல்லா வீதிக்கும் தடையாக உள்ளன. உணவுப் பண்டங்கள், கிழங்கு, மா மூடைகள் கூட வீதியில் வைக்கப்படுகின்றன. விலைப்பட்டியல், விளம்பரங்கள் போன்றனவும் வீதியில் இடையூறுகளைக் கொடுக்கின்றன. புதிய கட்டடங்கள் தற்போது எமது மக்களுக்கும், மாணவர்களுக்கும் இடையூறான வகையில் கட்டப்படுகின்றன. சில வீதிகளில் பாரிய மின்னொட்டு வேலைகள் நடைபெறுகின்றன. ஒட்டுபவர் காப்புக் கண்ணாடி போட்டுள்ளார். ஆனால் சிறு பிள்ளைகளுக்கு பாதிப்பு விளைகிறது. இப்படியான தவறுகள் ஏற்படாது தொழில் சட்டங்கள் பாதுகாப்பை ஏற்படுத்தத் தவறுகின்றமையால் விபத்துக்கள் ஏற்பட ஏதுவாகின்றது. வட பிராந்திய போக்குவரத்துச் சபை நடைமுறை போன்று எடுத்துக்காட்டாக செயற்பட்டு விபத்தினைத் தடுக்க உரியவர்கள் முன்வரவேண்டும்.

★ இலுப்பையடிச் சந்தி போன்றவை அகலமாக்கப்படவேண்டும்.

★ யாழ். அரசினர் வைத்தியசாலை முன் ஓட்டோ தடையாக நிறுத்தப்பட்டுள்ளது.

★ வீதி ஓரமாக உள்ள மரக்கிளைகள் வெட்டப்படாத நிலை இவை வாகனங்களையும், பிரயாணிகளையும் காயப்படுத்துகின்றன.

★ வாகனச் சாரத்தியம் செய்ய அனுமதிப்பத்திரம் பெற செய்யப்பட்டுள்ள ஒழுங்கு விரிவாக்கப்படவேண்டும்.

★ பாவனைக்கு தேவையில்லாத மின்கம்பங்கள் அகற்றப்படவேண்டும்.

★ வீதிகள் குண்டும் குழியுமாக இருப்பவை திருத்தப்படவேண்டும்.

க.க.ராசா
நல்லூர்.

ராஜா யாழ்ப்பாணம்
சேது புகழ் விக்ரம், காவேரி, மணிவண்ணன்
இனிய பாடல்களுடன்
காசி
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
வெள்ளி, சனி, ஞாயிறு (3 காட்சிகள்)
10.30, 2.30, 5.00 (புதிய நேரம்)

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று முதல்
விஜய், ரம்பா, தேவயாணி
நடித்த
நினைத்தேன் வந்தாய்
(ரீஸ்ஸ்)
(இனிய பாடல்கள் நிறைந்த படம்)
காட்சிகள்: 11.00, 3.00 (புதிய நேரம்)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அஜித், ஜோதிகா நடித்த
பூவெல்லாம் உன் வாசம்
(ரீஸ்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பு.நே.)

## பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை வணிகத்துறை மாணவர்களுக்கு!

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு பயணம் செய்யும் ஒழுங்குகள் பூர்த்தியடைந்துள்ளன. எனவே நாளை (04. 03. 2002) திங்கட்கிழமை காலை 6. 30மணிக்கு 1ஆம், 2ஆம் வருட வணிகத்துறை மாணவர்களை கலாசாலைக்கு சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர்
வணிகத்துறை,
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை.

(C/20941)

# கடத்தப்பட்ட சிறுமியை சம்பூரில் புலிகள் மீட்டனர்!

கொழும்பு,மார்ச்3

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் வைத்து கடந்த வியாழக்கிழமை கடத்தப்பட்ட யாழ்ப்பாண வர்த்தகரின் 4வயது மகள் பிருந்தாவை கிழக்கில் மூதூர் சம்பூரில் வைத்து விடுதலைப் புலிகள் நேற்று மீட்டுள்ளனர்.

பாடசாலைக்குச் சென்ற இந்தச் சிறுமியை கடத்திய நபர் மூதூர் கிளிவெட்டியில் உள்ள தமது ஒரு வீட்டில் அவளை ஒளித்து வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது.

சிறுமியை விடுவிக்க அந்த நபர் ஐந்து லட்சம் ரூபாவைக் கோரியிருந்தார்.

இது தொடர்பாக சிறுமியின் தந்தையாரான ஆறுமுகம் செந்தில் கொட்டாஞ்சேனைப் பொலீஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிவெட்டியில் சிறுமி தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்ததை அடுத்து சிறுமியை மீட்க உதவும்படி அவர் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் க.கரிகாலனிடமே கேட்டிருந்தார்.

கரிகாலனின் பணிப்புரையை அடுத்து மூதூர் மாவட்டப் பொறுப்பாளர் ஐங்கரன் தலைமையிலான புலிகளின் குழு சம்பூர்ப் பகுதியில் தேடுதல் நடத்தி சிறுமியை மீட்டது.

சிறுமியைக் கடத்திய நபரான லக்சுமிகாந்தன் மதியழகன் தலைமறைவாகி விட்டதாகக் கூறப்படுகிறது.

சிறுமியை கொழும்புக்கு அழைதது வருவதற்காக சிறுமியின் பெற்றோர் நேற்று மூதூருக்குப் புறப்பட்டுள்ளனர். (ஐ-3)

# இலவச சட்ட ஆலோசனை நேற்று குருநகரில் ஆரம்பம்

யாழ்.மனித முன்னேற்ற நிலையம் கரிதாஸ் செடேக் நிறுவன அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ள இலவச சட்ட ஆலோசனைச் சேவை நேற்றுக் காலை 9 மணிக்கு குருநகர் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை சி.ஜெயக்குமாரின் ஆரம்ப உரையைத் தொடர்ந்து குருநகரைச் சேர்ந்த சுமார் 150 பேர் தமது பிரச்சினைகள் தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பித்தனர்.

மரணச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், காணாமற்போனோர் தொடர்பான மனுக்கள், படையினரின் பாதுகாப்பினுள் தமது குடியிருப்புக்கள் இருப்பது மற்றும் இழப்பீடு தொடர்பான மனுக்கள் தமக்குச் சமர்ப்பிக்கப்பட்டதாக சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

பொதுமக்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காக சட்டத்தரணிகள் அன்ரனிட்பிள்ளை, எஸ்.ஜெயசிங்கம், செடேக் நிறுவனத்தின் மனித உரிமைகள் பிரிவு சட்டத்தரணி பிரியந்த ஹமகே மற்றும் மனித உரிமைகள் பிரிவு பெண்கள் அணியின் தலைவி எஸ்.சாந்தினி வட்டவல ஆகியோர் பிரசன்னமாயிருந்தனர்.

இதேவேளை - இந்த இலவச சட்டச்சேவை இன்று காலை 9மணிக்கு பருத்தித்துறையிலும் பிற்பகல் 2.30 மணிக்கு கரவெட்டியிலும் இடம் பெறும். (ஐ-51)


**Sri Lanka Computer Driving Licence (SLCDL) Examination**

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படும் மேற்படி பரீட்சை எமது தலைமை அலுவலகத்தில் இம்மாத இறுதி வாரத்தில் நடைபெறவுள்ளது. MS.OFFICE கற்கை நெறியினைப் பூர்த்திசெய்த மாணவர்கள் (எந்த நிறுவனத்திலேனும்) மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள். மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

- இயக்குநர்.
IIS, யாழ்ப்பாணம்.

(C/20930)



யாழ் கல்வி நிலையம்

1996 YTC

பரிசளிப்பு விழா

இடம்:– யாழ் கல்வி நிலையம் (மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்)
காலம்:– இன்று (03.03.2002) ஞாயிறு பி.ப.1.30 மணி
தலைவர்:– திரு.க.சுபாநாதன் (நிர்வாகி, யாழ் கல்வி நிலையம்)
பிரதம விருந்தினர்:– Dr.R.Rajendraprasad M.B.B.S.,M.Phil.
Head Pathology, Faculty of Medicine.
சிறப்பு விருந்தினர்கள்:– திரு.அ.குமாரவேல் (விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி, கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் - J/99)
திரு.க.அருந்தவராஜா (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.ஆ.விவேகானந்தன் (அதிபர், யாழ்/உயரப்புலம் மெ.மி.த.க. வித்தியாலயம்)
Mr.D.Sam (நிர்வாகி, DMI கல்வி நிலையம்)
கௌரவ விருந்தினர்:– திரு.து.குருநாதசிவம் (தொழிலதிபர், சிவா நறுமணப் பூங்கா)
பரிசில் வழங்கல்:– திருமதி கௌரி ராஜேந்திரப்பிரசாத்

(சி/20934)

2001இல் 5ஆம் தர புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை இவ்வேளையில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| 1. கு. ஹம்சத்வதனி | 156 | 2. இ.தர்மிகா | 141 |
| 3. க. கஜேந்தினி | 137 | 4. ந.பிரியதர்சினி | 13[illegible] |
| 5. மு. வாகீசன் | 132 | 6. சு. கௌசிகா | 127 |
| 7. கெ. ரொஷான் | 12[illegible] | 8. அ.கடோக்கஜன் | 121 |
| 9. ஞ. நிசாயா | 118 | 10. வை. கோகுலன் | 117 |
| 11. கு. கேதவன் 117 | | | |

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்: சிவா நறுமணைப் பூங்கா.


## வரதர் அணி வரவேற்பு!

நாட்டில் நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதற்காக அரசும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி ) வரவேற்றுள்ளது

இது தொடர்பாக வரதர் அணி அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

## ஜெயலலிதாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பின்பேரிலேயே அவரைச் சந்தித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழக ஆளுநர் பி.எஸ்.ராம் மோகன் ராவையும் கதிர்காமர் சந்தித்தார். (ஐ)

## கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

16 பேர் அடங்கிய ஸ்கன்டிநேவியன் கண்காணிப்புக் குழுவுக்குத் தலைமை வகிக்கும் ரொன்ட் புருகோவிட் நோர்வே இராணுவத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஆவார். (ஐ-3-6-9)

## நிலாவரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டி கிணற்றில் போடப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இச்சம்பவம் அப்பகுதி மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பெரும் எண்ணிக்கையானோர் நேற்று சடலத்தைப் பார்வையிடத் திரண்டிருந்தனர்.

இது தொடர்பான விசாரணைகள் இன்று நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-9-133)

## கண்காணிப்புப் பணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படவில்லை.

கண்காணிப்புக் குழுவின் தலைவர் வடக்கு - கிழக்கில் உள்ள சகல மாவட்டங்களுக்கும் விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்த பின்னரே அது குறித்து முடிவு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கண்காணிப்புக் குழுவின் தலைமையகம் கிளிநொச்சி அல்லது யாழ்ப்பாணத்தில் அமையக்கூடிய சாத்தியம் உள்ளதாகத் தெரிவித்த அவர் அதன் கிளை அலுவலகம் ஒன்று திருமலையில் அமைக்கப்படும் என்றார்.

இதேவேளை -

உள்நாட்டில் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபடும் 'பெப்ரல்' அமைப்பு இந்தக் கண்காணிப்புக் குழுவுடன் இணைந்து செயற்படும் என்று அந்த அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட்ரிக்கோ தெரிவித்தார். (ஐ-3-6-9)

## இன்னும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவாளர்கள் பங்குபற்றிய கூட்டம் ஒன்றில் உரையாற்றியபோது ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார் என்று இணையத் தளம் ஒன்றில் செய்தி வெளியாகி இருக்கிறது.

ஒருவருட ஆட்சிக்குப் பின்னர் ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைப்பதற்குத் தனது அதிகாரங்களைப் பயன்படுத்த அவசியம் இருக்காது. ஏனெனில் இந்த அரசின் போக்கைப் பார்த்தால் அது இன்னும் இரு ஆண்டுகளில் தானாகவே கவிழ்ந்து விடும் - என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

பொலீஸ் திணைக்களத்தின் தேசிய புலனாய்வுப் பணியகம் தனது உரைகளைப் பதிவு செய்து வருவதாகவும் ஜனாதிபதி குமாரதுங்க தகவல் வெளியிட்டார்.

தான் எங்கு சென்றாலும் அங்கெல்லாம் தனது உரைகள் இரகசியமாகப் பதிவு செய்யப்படுகின்றன என்று அவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார். (ஐ-3-6)


**Personal Classes**

MS Office
CorelDRAW
Page Maker
Photo Shop

நேரம்: மாலை 4.00-9.00

மேலதிக விபரங்களிற்கு

STP 548, Palaly Road, Jaffna


# ரத்னசிறி விக்கிரமநாயக்கா அரசியலில் இருந்து ஓய்வு

கொழும்பு,மார்ச்3

முன்னாள் பிரதமரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவருமான ரத்னசிறி விக்கிரமநாயக்கா அரசியலில் இருந்து ஓய்வு பெறப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

சுகவீனம் காரணமாக ஹொங்கொங்கில் தங்கியுள்ள அவர் அரசியலில் இருந்து ஓய்வுபெற விருப்பம் தெரிவித்திருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தோல்வியடைந்ததை அடுத்து எதிர்க்கட்சித் தலைவராக ரத்னசிறி நியமிக்கப்பட்டிருந்தார். அவர் அப்பதவியை ஏற்றதை அடுத்து சுதந்திரக் கட்சிக்குள் உருவான முரண்பாடுகளை அடுத்து ரத்னசிறி திடீரென வெளிநாடு பயணமானார். ஹொங்கொங் சென்ற அவர் பின்னர் அங்கிருந்து தனது ராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அனுப்பியிருந்தார். (ஐ-3)

# உடன்பாட்டை ரத்துச்செய்யக் கோரி சிஹல உறுமய கொழும்பில் ஆர்ப்பாட்டம்

## ஜனாதிபதிக்கு மகஜர் கையளிப்பு

கொழும்பு,மார்ச்3

அரசும் விடுதலைப் புலிகளும் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு உடன்பாட்டை நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி ரத்துச்செய்யவேண்டும் என்று கோரி 'சிஹல உறுமய' ஆதரவாளர் கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நேற்றுமாலை 4 மணிக்கு இடம் பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பிக்குகளும் கலந்துகொண்டனர்.

'நாட்டின் இறைமைக்கும் குந்தகம் விளைவிக்கும் உடன்பாடு', 'தமிழீழம் உருவாக வழிவகுக்கும்' என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

அதன்பின் ஆர்ப்பாட்டக்காரர் ஜனாதிபதி மாளிகை நோக்கிச் சென்றனர். சதாம் வீதியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் கொடும்பாவியை ஆர்ப்பாட்டக்காரர்கள் எரித்தனர்.

ஜனாதிபதி மாளிகைக்குள் செல்ல அவர்கள் முனைந்தனர். ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் அவர்களைத் தடுத்து நிறுத்தி அவர்களில் இருவரை மட்டும் உள்ளே சென்று ஜனாதிபதியைச் சந்திக்க அனுமதி வழங்கினர்.

அதையடுத்து இரு பிக்குகள் ஜனாதிபதியைச் சந்தித்து மகஜர்களைக் கையளித்தனர். (ஐ-3-64)


**R.B.BOOKING CENTRE**

ஆர்.பி.(B) பஸ் ஆசனப் பதிவகம்

யாழ்., கொழும்பு, மட்டக்களப்பு, திருமலை, கண்டி பஸ் சேவைகள்.

Prop: V.RAJARATNAM (Selvam)

2nd Flock, Model Market, JAFFNA

அவசர கலந்துரையாடல்

பல வருட காலமாக யாழ்.மக்களுக்கு யாழ். - கொழும்பு மற்றும் தூர இடங்களுக்கான பஸ் சேவையை சிறப்பாக நடத்தி வந்த ஆர்.பி.(B) பஸ் ஆசனப் பதிவாளர்கள் மீண்டும் அரசு - விடுதலைப் புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் இதுவரை தடைசெய்யப்பட்டு இருந்த A 9 பாதையை திறக்கும் பட்சத்தில் தமது யாழ். - கொழும்பு - கண்டி - திருகோணமலை - மட்டக்களப்பு பஸ் சேவையை மீள ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம். இந்தச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட இருப்பதால் தமது காரியாலயத்தில் வேலை செய்த முன்னாள் ஊழியர்களையும் தமது பதிவகத்தில் பதிவுசெய்து பஸ் சேவையை நடத்திவந்த சொகுசு மற்றும் மினிபஸ் உரிமையாளர்களையும் நாளை (04.03.2002) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு இல.15, Model Market, Jaffna இல் இயங்கிவரும் காரியாலயத்தில் சந்திக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

V.இராஜரட்ணம் (செல்வம்)
(R.B.Booking Centre)

(1287)


# மரண அறிவித்தல்

## சீவரத்தினம் தெட்சணாமூர்த்தி

(S.T.மூர்த்தி)

ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் தற்போது வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் தெட்சணாமூர்த்தி 01.03.2002 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தர் - பொன்னம்மா தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற மகாலட்சுமியின் அன்புக் கணவரும், கந்தசாமியின் அன்புச் சகோதரரும், ஜீவசோதி (வவுனியா), சிவநேசன் (கனடா), சிவயோகேஸ்வரி (சங்கானை), சிவசங்கரி (ஜேர்மனி), சிவராமலிங்கம் (ஓமான்), சிவரஞ்சனா (பிரான்ஸ்), சிவலோசனா (மத்திய வங்கி, [illegible]) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சத்தியநாதன் (வவுனியா), [illegible]நாயகி (கனடா), தவபாஸ்கரன் (சங்கானை), யோகேஸ்வரன் (ஜேர்மனி), குணநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனனி, மயூரன், சர்ஜினி, அம்பிகை, அபிராமி, சைறா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.மகேந்திரராஜா (மைத்துனர்)
ம.சயந்தன் (மருமகன்)

இல.201,பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(1291)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.03.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.